உ
சிவாயநம

சந்திரதீபம்

நலத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ்: 1 வைகாசி 21-ந் திகதி வெள்ளிக்கிழமை (3 - 6 - 1977) சுடர்: 1

என் நாயகன் விநாயகன்

ஈன்றெடுத்ததாயிலும் எனக்கு இனியவர் உளர் எனின் அவர் என்நாயகன் விநாயகனே. தனது திருவடி வழிபடும் அடியவர் அடர் கடியும் கடவுள் அவரே. இவர் அருளே இந்த உலகை என்றும் ஆக்கத் துறையில் நிலவச் செய்து கொண்டு இருப்பது என்பது முழுவதும் உணர்ந்த பெருமக்கள் துணிபு.

எம்பிரான் சிவனே முழுமுதற் பொருளாவார் என்று அவர் பெருமையை உலகறிய வைத்திடவும் அவர் அருள் செய்த வேத ஆகமங்களை உலகறியச் செய்திடவும் ஏழையேன் எடுத்துக் கொண்ட இப்பணியில் இடர்யாவும் நீக்கி என்னை உய்யக் கொண்டு வாழ்வுறவைப்பன் நற்குஞ்சரக் குழந்தையாய அவன் என அவன் திருப்பாத கமலங்களை வணங்கிக் கொள்கின்றேன்.

கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்து எம்பெருமான் விநாயகனை மோனமே குறியதாம் முதலெழுத்து அருளிய ஞானமாமதலை என எத்துணைச் சிறப்புடன் போற்றுகிறார். ஆம் அவர் அறிதற்கு மிகஅரியவர். அற்புதமானவர். கண்அருள் நிறைந்த கவின் பெறும் கொம்புடையவர். உலகில் தீமைதரும் பெரும்பொருளாய் பல இடமும் தோன்றும் நெருப்பு உயிர்களைச் சிதைத்திடாது நின்றிட சிறு காற்று தோனறிடும் அசையும் திருச்செவியுடையவர். யானை முகமுடையவர். பூதகணங்கட்கு நாயகர். இப்படி என்நாயகன விநாயகன் திகழ்கின்றார் அன்றும் இன்றும் என்றும் எவர்க்கும் அருளும்வகையே. சிந்தையில் உன்னினார் தீவினை தீர்த்திடும் எம்பெருமான்விநாயகன்தோன்றியஇடம் மோனமே குறியதாம் முதல் எழுத்து ஓங்காரம் என்றபோது அவரை எண்ணும் அடியார்கள் அதன் ஆழ்ந்த கருத்தை உணர்தல் அல்லது ஆராய்தல் நலம். முதற்கண் மோனமே குறிஎன்றமையால் மௌனத்தின் வைப்பிடமாவதே ஓங்காரம். அருணகிரியார் திருப்புகழில் இதனை ''அகலம் நீளம் யாராலும் ஒருவராலும் அறிய அரிய மோனமே கோயில் எனக்கொண்டு என்றும்; ஆங்காரமும் அடங்கார் மௌனத்தில் ஒடுங்கார் நினைப்பு அற்று தியானம் செய்யார் என்றும் அப்படியாக நினைப்போதளவேனும ஒடுக்கத்தில் தியானம் செய்வார்க்கு ஓங்காரத்து உள்ளொளியாக இறைவன் தோற்றுவான் என்றும் செம்மை பெறச் சொல்கின்றார். இதனால் இந்த ஆங்காரம் எத்துணைப் பொல்லாத இருள் அருள் ஒளியின் இருப்பிடமாய ஓங்காரத்தை நாடுவார்க்கு என்பது தெளிவாகின்றது. இதனாலேதான் நாம் எம்பெருமான் விநாயகனைப் பூசித்திடும் பொழுது முன்னர் அவர்க்கு ஆங்கார ஆணவத்தின் உருவம்போன்ற தேங்காயை உடைக்கின்றோம். இதனை ''நாளி கேர கண்டம்'' என மொழிகின்ற வடமொழிப்பதத்தாலும் தெளிந்து கொள்ளலாம்.

அவ்வாறு ஞானமே திருவுருவாய எமது பெருமானை பூக்கொண்டு துதித்து வழிபட்டு திருவும் சிறப்பும் சீரும் பெருமையும் புண்ணியமும் அடைந்த பெருமக்கள் அநேகர். அவர்வரலாறுகள் ஆராய்ச்சிக்கும் அப்பாலாய் அளவற்றன. இதற்கு நாம் ஆராய்ச்சி செய்திடல் இல்லாது அப்பனை என் நாயகனை விநாயகனை ஐந்து கரமுடையவனை யானை முகமுடையவனை இளம்பிறை சூடிய செஞ்சடை உடையானை நாகபாம்பினை பூணூலாக உடையவனை அங்குசமும் பாசமும் கொண்டவனை பேரருளாளனை போற்றிவாழ்த்தி வணங்கிக் கொள்கின்றோம்.

ஆண்டவனின் அருள் வேடங்கள்

திருஞானசம்பந்தப் பெருமான் சீகாழியில் அவதரித்து அங்கு மூன்றாண்டாய குழந்தைப் பருவத்து ஓர் நாள் தமது தந்தையார் சிவபாதவிருதயர் வேத விதியின்படி உள்ள நீதிமுறையால் தாம் செய்திட வேண்டிய சடங்கின் கிரியைகளை முடித்தடற்கு நீராடிட குளக்கரைக்கு போகும் பொழுது தந்தை போவது கண்டு தமது மாளிகை முற்றத்து தந்தையாரை போக விடாது தாமும் பின்தொடர்ந்து அழுதபடி சென்றார்.

தம்மைத் தொடர்ந்து அழுதபடி பின்செல்லும் குழந்தையை முக நோக்கி தாம் முன்னால் போவதையும் சிவபாதவிருதயர் நிறுத்தி அப்படா! நீவரக் கூடாது என்று கோபிப்பார் போல் தடுத்தாலும் எம் குழந்தை பிடிவாதமாக கிண்கிணி அணிந்த காலை நிலத்தோடடித்து தான் திரும்பமாட்டேன் என சாதித்தலும் அவரும் பெரியவர் மகனை நோக்கி சரி உன் செய்கை இதுவென்றால் நீவா என தம்முடன் கூட்டிக்கொண்டு திருத்தோணிபுரக் கோவிலின் முன்புள்ள குளத்திடத்தாக வந்து சேர்ந்தார். குளத்திடத்து நீர் மூழ்க வந்தாயிற்று. மகன் சிறு குழந்தை தனியே விட்டு விட்டு குளத்தினுள் போக முடியாது. அதனால் கொஞ்சம் பயம். இருந்தாலும் வேத தருமத்தின் தலை நிற்பவர் ஆதலால் அக்கருமம் செய்யாமலும் இருக்கமுடியாது. எனவே அதற்கு தமக்கு தெரிந்த ஒரே ஒரு வழியான திருத்தோணிபுரக் கோவிலில் இருந்த வள்ளலாம் பெருமானை வணங்கி அவர் காவலில் மகனாரைக் கரையில வைத்து தான் குளத்தில் இறங்கினார் உலகுய்ய மகப்பெற்ற சிவபாதவிருதயர். குளத்தில் இறங்கி நீராடி தருப்பணம் செய்து தமக்குற்ற நியமங்களை செய்பவர் இப்போதெல்லாம் கரையில் இருக்கின்ற குழந்தை மகனார் தம்மைக் காணும் படியே செய்கின்றார். ஆனால் இன்னொரு செயல் இருக்கிறது; அது அகமருடம் படிந்து (தம் உடம்பு முழுவதையும் நீருள் அமிழ்த்தி) செய்யும் கிரியை. நீர் மூழ்கிட மகன் இதைக் காண முன் செய்திடுவோம் அங்கு தான் என் அப்பன் காவலில் பிள்ளையை வைத்தேனே என்ற உறுதியுடன் நீரில் முழுவதும் தன்னை மறைத்திட நீர் மூழ்கினார்.

வேத விதி நின்ற அந்தண முனிவர் அவ்வாறு நீர் மூழ்குதலும் தனது தந்தையைக் காணாது கொஞ்சமும் தாங்கமாட்டார் இக்குழந்தை என்றதனால் இது வரையும் தெரிந்த அப்பா நீரில் மூழ்கினதன்மை அறியாது அவரைக் காணாது தவிப்புற்று கரையில் இருந்த குழந்தை அழத்தொடங்கினார். கண்மலர்கள் நீர்ததும்ப சின்னக்கை மலர்களால் கண்ணைப் பிசைந்து வண்ணமான செங்கனி போலும் வாயின் அழகிய சொண்டுகள்மேல் கிழாகதுடித்திட வேதங்களின் ஓசை பெருக எல்லா உயிரும் வாழ்வுற்றோம் என்று குதுகலிப்ப புண்ணியத்தின் வடிவாய அக்குழந்தை விம்மி அம்மையே அப்பா என்று கூவி அழைத்து அழுதலும்; அழுத அத்தன்மை காவல் பெற்ற அந்த தோணிபுரத்தந்தைக்கும் தாய்க்கும் கேட்டது. நீர் மூழ்கிய தந்தைக்கு கேளாது. அவர் தனது தருமத்தின் வழி. ஆனால் அந்த தோணிபுரத் தந்தை உடன் தன் மனைவி உமையுடன் எழுந்தருளி வந்து குழந்தைமுன் நிற்கிறார். அழுதவரை எடுத்து அழுகை தீர அணைத்து உச்சிமோந்து தன் மனைவியாரைப் பார்த்து அழுதபிள்ளைக்கு பால் கொடு என்றலும் அவ என் செய்கின்று தமது அபரஞானம் பரஞானம் என்னும் முலை சுரந்த பாலை பொற்கிண்ணதது எடுத்து பால் அடிசில் கொடுக்கின்று. அப்பாலடிசிலை ஏற்று உண்டார் பிள்ளை. உண்டதும் நிலைவேறை. இதற்கு முன் தெரியாத தெல்லாம் தெரிகின்றது. ஞானம் உதிக்கின்றது. பாடலும் வருகின்றது. இப்படி குழந்தை அழுகை தீர்ந்திட அக மருடம்படிய நீர்மூழ்கிய சிவபாத விருதயர் சிறுபொழுதில் நீர் முழ்கி தாம செய்யும் நியமங்கள் முடித்து கரை ஏறி வந்து பெரும் உணர்வினுடன் பொலிகின்ற தம் மகனாரைப் பார்க்கிறார். கூடநீன்று பால் கொடுத்த அந்த அம்மை அப்பா இவர் வர அவர்கள் கோவில் போகின்றார். மகனாரின் கடைவாய் எல்லாம் பால் வடியுது அதுகண்டு வந்துவிட்டது தந்தையார்க்கு கோபம். ஏன் என்றால் வைதிக மார்க்கத்தின் தலைநெறியில் நின்றவர் அவர். தாங்கள் உண்ணும் உணவில் கேட்பதில் கலந்து கொள்ளும்

(3-ம்பக்கம் பார்க்க)

கடவுள் தன்மை குழப்பத்தில் வராது.

மனம் ஒரு குரங்கு. அது என்றும் ஒரே நிலையில் இருப்பதில்லை நிமிடத்துக்கு நிமிடம் தனது போக்குகளை, சிந்தனைகளை எண்ணங்களை மாற்றிக் கொண்டேயிருக்கும். குரங்கு மரத்துக்கு மரம், கிளைக்குக் கிளை தாவுவது போன்று நமது மனமும்.

இத்தகைய மாறும் சக்தி படைத்த மனதிலும் நாம் முயற்சித்தால் தெய்வத் தன்மையைக் காண முடியும். முனிவர்கள் தியானம் செய்வதற்கு அமைதியைத் தேடி கானகம் செல்வதன் காரணமும் இதுதான்.

சலசலப்பு குழப்பம் என்ற புற சூழ் நிலைகளும் நம் மனதின் தன்மையை மாற்ற வல்லவை. அமைதியில் தனிமையில் தான் நம்மனதை ஒரு நிலைப்படுத்த முடியும். நமது மனமானது பல்வேறு காரணங்களால் சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கும் போது அல்லது மகிழ்ச்சியுற்றிருக்கும் போது நம் மனதை நம்மால் ஒரு நிலைப்படுத்த முடியாமல் போகிறது

தெய்வத்தன்மை என்பது நம்மால் பெறக்கூடாதது என்றல்ல. கடவுள் மனிதனை தம் சாயலாகப் படைத்தார் என்று ஆகமங்கள் அறிவுறுத்துகின்றன. தெய்வத்தின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் தெய்வத் தன்மை பெறு முடியாத தொன்றல்ல.

இத்தெய்வத் தன்மை மிக இலகுவில் பெற்றுக்கூடிய தொன்றுமல்ல. தெய்வத்தன்மையைப் பெறுவதற்கு முதலில் நம் மனதைக் கட்டுப் படுத்த வேண்டும். தம் மனதைக் கட்டுப்படுத்தி இறைவனுடன் ஒன்றிக்க அமைதியை தனிமையைத் தேடி முனிவர்களும் துறவிகளும் செல்லுகின்றனர். உலக ஆசாபாசங்கள் பற்றிய கவலைகளும் உற்றார் உறவினர் நண்பர் போன்றோரின் தொடர்புகளும் இதற்குத் தடைகளாயிருக்கின்றன.

மனிதன்மிருகமாகலாம் அவன் மனிதனாகலாம், அந்த மனிதன் இறைவனாகலாம், என்று பாடுவதிலும் அர்த்தம் நிறைந்திருக்கிறது. மனிதன் விரும்பினால் மிருகம் போன்று வாழலாம். தெய்வத் தன்மை பெற்றும் வாழலாம். நமது மனதை இறைவனிடம் எழுப்புதல் தான் பிரார்த்தனை அல்லது தியானம் அல்லது செபம் எனப்படும். இறைவனோடு மனதை ஒன்றித்து அவனுடன் உரையாடுல் என்றும் கூறலாம். இந்த ஒன்றில் வைத்து உரையாடலை அமைதியிலே தனிமையிலே தான் அடையமுடியும் ''மண்ணின் மேல் வான்புகழ் நட்டானும் மாசில் சீர் பெண்ணி

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழுதால் உன்னைப் பெறலாமே"

வாழ்க்கையில் எங்கள் அபீஷ்டங்களை நிறைவேற்ற ஒருசிறந்த கருவி அழுகை. உலகியலில் இந்த அழுகை பல துறைகளில் கையாளப்படுவதை நாமறிவோம. ஒருவரின் அழுகையைக் கண்டு மற்ருெருவர் இரங்குதல் இயல்பு. பாலியத்தில் மக்கள் தம்பெற்ருேரின் கவனத்தை ஈர்க்கவும், தம் ஆசைகளை நிறைவேற்றவும், சகசமாய்ப் பாவிப்பது இந்த அழுகையாய ஆயுதம். பெண்கள் தம் கணவரின் மனதைத் திருப்ப உபயோகிக்கும் கருவியும் இதுவே. காதலர் தங்கள் உள்ளக் கிடகையை வெளிப்படுத்தப் பாவிக்கும் உபாயமும் கண்ணீர். ஒருசாண் வயிற்றை வளர்க்க வகை தெரியாது அழுது பயன்பெறுவதும் உண்டு. ஏன் தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் வாக்காளரை வசியம் பணணவும் அழுகை ஒரு சிறந்த யுக்தியாகப் பாவிக்கப் படுவதும் இல்லாமலில்லை. இப்படியே பூணும் பணிக்கும், பொன்னுக்கும், சோற்றுக்கும், பூவையர்க்கும், அழுது திரியும் மாந்தர் இவ்வுலகில் அனந்தம்.

''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று பாடினுர் மாணிக்கவாசகர். முன்சொல்லிய உலகியலில் கையாளப்படும் இந்தவகை அழுகை அற்பமாய நிலையில்லாத சுகங்களையே தரவல்லது. ஆனுல் மாணிக்கவாசகர் மிக மேலான குறிக்கோளைப் பெறுவதற்கும் அழுகை வேண்டப் படுவதென எடுத்துக் காட்டுகின்றுர். பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப நிலையைப் பெறுவதற்கும் அது இன்றியமையாத தென்பது அப்பெரியார் கருத்து. பொதுப்படையாக உலக மாந்தர் அழுவது அற்பபோக போக்கியங்களுக்கு. ஆனுல் இவற்றின் நிலையாமையை அறிந்த பெரியோர்கள் அழுவது இறைவன் திருவருளை நாடியே. அந்த அழுகை மிகத் தூய்மையான அழுகை. அது ''பேரா, ஒழியா, பிரிவிலா, மறவா, நினையா, அளவிலா, மாளா, இன்பமா கடலே''த் தரவல்லது.

மணிவாசகரின் திருவாசகம் அழுகையின் தத்துவத்தை விளக்கவந்த இலக்கியம் என்ருல் அது மிகையாகாது. மணிவாசகர் ஒரு ஞானி. பரம ஞானி. இருந்தும் அழுகைக்கு அவர் திருவாசகத்தில் கொடுத்த முக்கியத்துவம் எல்லையற்றது. இறைவனை யடையும் மார்க்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம், என நான்காய்வகுக்கப்பட்டிருக்கின்றது. இந்த நான்கும் அன்பு கலவாதனவாயின் பயனளிக்கா. சரியை கிரியை யோகம் ஞானம் ஆகியவற்றிற்குப் புறம்பானதாகப் பக்திமார்க்கத்தைச் சிலர் கருதுவதுண்டு. அது பிழையானது. பக்திவலை யொன்றிற்தான் இறைவன் படுவன் என்பது மணிவாசகர் துணிபு. மெய்யான சரியை கிரியை யோகம் ஞானம் உள்ளத் தூய்மை யில்லா விடத்துச் சித்தியா. அன்பின் வழியன்றி உள்ளத்தூய்மை பெற முடியாது. அன்பு அல்லது பக்திப்பெருக்கைப் புறத்தே வெளிப்படுத்துவது அழுகை. அன்பின் ஊற்றுத்தான்இந்த அழுகை. ஆகவே, பக்தியைவளர்த்து உள்ளத்தைத் தூய்மை செய்வதற்கு அழுகை இன்றியமையாத வொரு சாதனம்.

நாள்தோறும் உடலில் சேரும் அழுக்கைக் குளித்து நீக்கித்தூய்மைப் படுத்திக் கொள்வது போலவும், நாள்தோறும் உடையில் சேரும் அழுக்கைத் துவைத்து நீக்கித் தூய்மைப் படுத்திக் கொள்வது போலவும், நாள்தோறும் உள்ளத்தெழும் பொய்மைகளை இறைவனை நோக்கி அன்பினுல் உருகி அழுவதன் மூலம் தூய்மைப் படுத்திக் கொள்ளலாம். இது சுலபமான ஒரு நேர்வழி. புற உபகரணங்கள், சம்பிரதாயங்கள், ஒன்றும் தேவையில்லை. தனிமையிலோரிடத்தமர்ந்து, நாள்தோறும் நம்முள்ளங்களில் அந்தரியாமியாக இருக்கும் பரமபிதாவுடன், அந்தரங்கமாகச் சம்பாஷிக்கப் பழகவேண்டும். நமக்குள்ள துன்பங்களையும் குறைபாடுகளையும் மனம்விட்டுச் சொல்லிக் கொளளலாம். ''தகப்பன் முன் மைந்தனேடிப் பால் மொழிக்குரல் ஓலமிட்டிடுதல்'' போல, உள்ளத் துறையும் நம் தந்தைக்கும் எங்களுக்குமுள்ள உறவை வளர்க்க இது சிறந்த வழி. கொளுகொம்பிலாமல் தவிப்போர்க்குக்கை கொடுத்துதவ வல்லவன் இறைவன் ஒருவனே. கருணையே சொரூபமான அவ்விறைவன் தன்னை யடைந்தார்க்குத் தன்னையே கொடுத்து விடுவன். பாரில் மாந்தர் கூடப் பிள்ளை அழப் பார்த்திருக்க மாட்டார்கள். பரமபிதாவும் அப்படியே. ஆனுல் எம் அழுகை எப்படியிருக்க வேண்டும் என்று அதற்கு இலக்கணமும் வகுத்து வைத்திருக்கின்றுர் அழுகை வேந்தர் மணிவாசகர். ''உள்ளந்தான் நின்று உச்சியளவும் உருக'' வேண்டும்; ''உடம்பெல்லாங் கண்ணுய் வெள்ளந் தான்பாய வேண்டும்'' என்று.

வழிபாட்டு முறைகளை யெல்லாம், வாசனையில்லா மலர்கள்போல வெறும் சம்பிரதாயங்களாக்கிக் கொண்டோம். அதனுலே அவற்றினுல் நமக்குப் பயன் கிடைப்பதில்லை அழுகையும் அப்படியே வந்துவிடக் கூடாது. மெய்யான அழுகை இதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். அதனை ஆநந்தக் கண்ணீர் என்பர். அந்த அழுகை பிழைகளைத்திருத்தும்; பிழைகளைத் தவிர்க்கும்; பிறவியைத் தடுக்கும்; குறைவற்ற இன்பத்தை அளிக்கும்; விதியின் வலிமையைக் கெடுக்கும். இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் ஒருங்கே தரவல்லது இந்த அழுகை. எவரும் பரீட்சித்துப் பார்க்கலாம். இறைவனின் பெருமையையும் எமது சிறுமையையும் உற்றுச் சிந்திக்க, பதைத் துருகும் அழுகை தானே வரும். அழுகையைப் போல ஆறுதலளிக்க வல்லது வேறு யாதுமில்லை. அழுது அழுது இறைவன் திருவடியடைந்த அன்பர் கூட்டம் இதற்குச் சான்று.

தந்தைதாய் பேண்

உலகில் பிறந்த எவர்க்கும் தம்மில் உண்மை அன்பின் பாசமுடையவர் யார் எனின் அவரைப் பெற்ற தாய் தந்தையே! அவர்கள் தம்புதல்வரைப்பெற்று எடுத்கிடற்கும் சீராக வளர்த்திடற்கும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் அனந்தமாகின்றது. தம்மைப் பெற்றிட தம்தாய் கொண்ட வேதனையைக் குறித்திடும் பொழுது மாணிக்கவாசகரும்''தாயொடுதான் படும் துக்க சாகரத் துயரிடை'' என மொழிதலால் உண்மையில் ஒவ்வோர் குழந்தையையும் அதன் தாய் பெற்றெடுத்திடும் வேளை கொள்ளும் வேதனை அளப்பரியது. ஆதலால் தான் அவ்வேளையை துக்கசாகரம் என மொழிகின்ருர். உண்மையில் கருவுற்ற நாள் முதல் அக்கரு சுகமானதொரு பிரசவமாதல் வேண்டுமென்றே இதற்கென நிகழ்த்தப்படும் வழிபாட்டின் (சீமந்தம் முதலிய முறையால்) தெளியப்படும். இப்படியான வேதனையால் பெற்றுஎடுத்தமக்களின் மீது அத்தாய் எத்துணைப்பரிவு கொள்வாள். தனக்கு எப்பொது ஓர் குழந்தை கிடைக்குமோ என நினைத்திருந்த தந்தைக்கு எத்தனை மகிழ்ச்சி.

ஆனுல் நாம் குழந்தைப்பருவத்து அந்த வேதனை அவருடன்சேர உணர்வோம் என்ருலோ அது இயலாது. எவர்க்குமே தெரியாது. தம்குழந்தை நோயுற்ற போது பிறந்து தவழ்ந்து நடந்திடும் போது பாடசாலை செல்லும்போது பின்னர் ஒரளவில் யாவும் விபரமாக விளங்கும் பருவத்தை பிள்ளை அடையுந்தனையும் அதனில் தந்தை தாயார்க்கு எத்தனை வேதனைகள் நிகழ்கின்றன, சிறு குழந்தை விளையாடவேசெல்லும் போதும் நேரத்து திரும்பாவிட்டால் என் பிள்ளையை காணவில்லையே! எவ்வளவு பதைப்பு கலக்கம். நாம் சில பொருள்களில் ஆசை கொண்டால் என் பிள்ளை கேட்கிருன் என் வறுமை நிலையில் இதனைச்செய்திடமுடியவில்லையே! இதற்கு பலரிடம் கடன் வாங்கி தம் அலுப்புகளை பாராது உழைத்து பொருள் ஈட்டி உடைதந்து உணவுதந்து உடையணிந்துமகிழ்வுடன் நிற்கும் எம்மைப் பார்த்து உளம்குளிர்ந்துசிலகால்நாம் பிழைவழிபோகமுயலும்போது அன்பினுல் வெருட்டி கம்பு ஒச்சி பின்னர் அடித்திட்டாலும் நாம் அழுதது கண்டு இரங்கி தாம் அதற்கு பரிகாரமாக விசேட உடை அல்லது தின்பண்டம் இவை தந்து எம்மை உளம் மகிழ்வித்துப் போற்றிய அவர்களது அன்பு எத்துணைப் பெரிதானது. தங்கள் பிள்ளைகள் மேல் கொண்ட பாசத்தால் சிற்சில வேளைகளில் தங்கள் விருப்பத்திற்குரிய உணவு வகைகளையே தம் மக்கள் உண்ண விடுத்து தாம் தமது உணவுகளை சுருக்கிக் கொள்ளும் தன்மையும் உண்டு. இப்படி அருமையாக வளர்த்திடும் தம் மக்கள் நல்நெறிப்பட வாழவேண்டுமென்பதிலேயே தந்தையும் தாயும் விருப்பமுடையவர். தனது பிள்ளை தன்னுடைய சொற்படிகேட்டு நடக்கின்ருன் நடப்பான்என்பதையே எல்லாத் தந்தையரும் விரும்பிக் கொள்வார்கள். தந்தையினுடைய சொல்லை மந்திரம் போலக் கொண்டு ஒழுகுவது ஒவ்வொரு பிள்ளைகளினது கடமையுமாகும் நீதியுமாகும். தந்தைதாயர் சொல்வது தவறு என மைந்தர் உணர்வுகொண்டால் தந்தை தாயரை தமது விருப்பத்தை எடுத்து நன்கு மொழிந்து அவர்களைத் தெளியப்பண்ணி அவர்கள் விருப்பத்தின் படி தம் கருமங்களைச் செயல்களைச் செய்வதே மிக நன்று. இதனை உணர்ந்து தான் பெரியோர்கள் ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'' என்கின்ருர்.

கந்தபுராணத்து இதைப் பற்றி வருகின்ற இருசம்பவங்களை இவ்விடம் நான் தருகின்றேன். குச்சகர் என்னும் அந்தண முனிவர்க்கு ஓர் மகன் கவுச்சிகன் என்னும் நாமமுடையவர். அப்பிள்ளை வளர்ந்து தெய்வ நிலை அடைய வேண்டுமென்ற விருப்பத்தால் ஓர் குளக்கரையைச் சென்று சேர்ந்து அங்கிருந்து சிவனை நினைந்து தியானம் செய்து கொண்டு இருந்தார். இத்தியான நிலை மேலோங்கி தன்னையும் மறந்து அவ்விடத்து நாட்டிய ஓர் குற்றிபோல் அசைவற்று இருந்து தவம் புரியும் வாய்ப்பைத் தந்தது. அந்தநிலையில் இவர் இருப் சில மிருகங்கள் குளத்தில் நீர் குடித்துவிட்டு அசைவின்றி இருந்திடும் இவரை ஓர் குற்றி என நினைந்து தமது சொறி தேய்க்க இவர்மீது உராஞ்சிப் போகும், அப்போதும் இவர்க்கு ஒன்றும் தெரியாது. இவர் நிலை இப்படியாக விஷ்ணுபிரான் இவர் தவத்தின் மகிமை கண்டு முன் தோன்றி இவர்க்கு மிருகண்டுயர் என்ற சிறந்த பட்டப்பெயரும் ஆசியும்செய்கிருர். கவுச்சிகன் என்னும்அம் மைந்தர் அவரது ஆசியால் மலர்ந்து தான்பெற்ற இன்பநிலையை உணர்ந்து மீளவும் தனது தவத்தால் விளையும் ஆனந்த சித்தியின் இன்பத்தைப் பெருக்கிக் கொள்ளக் எண்ணிக் கொண்டு அந்த எண்ணமுடன் தந்தை குச்சகரிடம் தன்தவத்தின் பேற்றினைச்

(7–ம் பக்கம் பார்க்க

சந்திரதீபம்

சமர்ப்பணம்

தேனுந்து முக்கனிகள் பால் செங்கரும்பு இளநீர் இவற்றின் சுவை மிக்க சீரும் நன்றன்று என்ற திவ்வியமான சிவஅமுது ஊறி, தீதும் பிடித்த வினைகள் ஏதும் பொடியாகிப் பறக்க சிவன் சிவச் சொருபம் எனத் தேறிய பெரியோர் பாதகமலம் சூடி வணங்கி வாழ்த்தி இன்புற மலர்ந்து சந்திரதீபச் சுடர் தகவுடைய உங்கள் கைமலர்மேல் வருகின்றது. சிவனே பரம்பொருள் என ஓதிக்கொண்டு திருவுடைய வேதநெறி தழைத்திடவும் சீர் மிகுந்த சைவநீதி ஓங்கிடவும் அறியாமையின் இருளே மிகும் உலகில் சுடர் கொண்டு இப்பத்திரிகை தோன்றியுள்ளது.

ஆவதும் அழிவதும் எல்லாம் அவர் செயல். நாம் அதற்கு பொறுப்பல்ல. நாம் எதனையும் இப்படியாக இது நடைபெறும் என உணரும் ஆற்றல் உடையோமும் அன்று. எமது தகவிற்கிணங்க வந்தவாறு எமக்குற்ற இயல்பில் பணி செய்திட முயல்வோம். யாவர் எதனை நினைந்தால் என்ன சொன்னுல் என்ன அதை நாம் இங்கு நோக்கப் போவதில்லை அதனுல்நாணவும் போவதில்லை. நல்லோர்கள் உளம் களிப்புற எம்மால் இயன்றவாறு பணி செய்வோம்.

ஆறுமுகமுடைய குருபரமூர்த்தி அவன் திருப்பாதத்தை விரகுற நோக்கி உருகி வாழ்த்தி விழிகள் நீர் தேக்கிச் சொரிய அன்பு மேன்மேல் மிக இரவு பகல் என்ற பேதமே அறியாத நிட்டை நிலை கைகூடிட வாசனை சொரியும் குராமலர் அணிந்த குமரா முருகா சடாட்சர சரவணபவா கார்த்திகை பெண்கள் முலை நுகர்ந்த அரசே அமுதமே என பாடிப்பாடி மொழிகுழறி அழுது அழுது அவனுக்கே ஆட்பட்டு உய்ந்திட இப் பிறவியின் பேருக அமைய நல்லருள் ஈந்து காத்தருள் வாய் என வேண்டிப் பணிந்து; உலகில் நன்மை தரும் அருள் நெறியின் பெருமையை சொல்லப் போகின்ருேம்.

இது இன்று புதிதல்ல இனியும் புதிதல்ல எப்பவோ தொட்டு இக்காரியம் உள்ளது. பலகால் உலகஇயக்கத்தின் அமைப்பால் நாம் அந்த அருள்நெறியை மறந்திடுகின்ருேம். ஆதலால் அந்த மறக்கும் கொடுமையை மாற்றி எம் ஆவியை வற்புறுத்தி சிந்தையை அவன்பால் வசப்படுத்த முயல்கின்ற பணியே இத் தீபத்தின் பணி.

''வாழ்க உலகம் எல்லாம்''

— ஆசிரியர்

(1ம்–பக்கத் தொடர்ச்சி)

கடவுள் தன்மை...

னுட் கற்புடையாளும், உண்ணும் நீர்க் கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவரும் சாவா உடம்பு எய்தினுர்''என்பர் பெரியோர். சாவா உடம்பு இறைத்தன்மை தெய்வீகத் தன்மை எல்லாம் ஒரே அர்த்தத்தையே நமக்கு வலியுறுத்திநின்றன.

எனவே தெய்வத்தன்மையைப் பேணி அதனை நாம் அனைவரும் பெற முயற்ச்சிக்க வேண்டும்.

இத் தெய்வத்தன்மையை உண்மை அன்பிலும் மன அமைதியிலும் பெற்று அதன் பரிசாக இறைவன் எமக்களிக்க விருக்கும் முத்தியின் பத்தைப் பெறுவோமாக.

(வான் புகழ் நட்டல் தெய்வ அருள்நெறியை விளங்கிடவைத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டவனின் அருள் வேடங்கள்......

மக்களில் எல்லாம் தமது ஆசார சீலங்களை நோக்குபவர். அதுவன்றி பொன்னையோ பொருளையோ பெரிதென எண்ணுதவர். இதனுலே மகன் யாரோ கொடுத்த பாலை உண்டனர் அது தவறு என நினைந்தமையால் தமது ஒரு கையில் ஓர் கம்பும் எடுத்தாயிற்று. அதனை ஓங்கி காலுக்கே அடிப்பராய் மகனை நோக்கி எச்சில் மயங்கிட யார் கொடுத்த பால்சோறு நீ உண்டாய் என்று அக்கம்பை வீசிடலும் உடன் அடி விழப்போகும் காலை மெதுவாக அடி விழாதபடி மேல் தூக்கி முன்பு அழுதது போல் அடிவிழும் என்ற பயத்தால் அழுதலின்றி ஆநந்தக் கண்ணீர் துளித்திட; கம்புவீசி நின்ற தந்தையார்க்கு சின்னஞ்சிறிய திருக்கையை உச்சி மேலாக நீட்டி திருவிரலால் சுட்டி உமையம்மையாருடன் இடபத்தின் மேல் நிறைந்த கருணையுடன் நின்ற பெருமானை காண்பித்து; தந்தையார்க்கு அவர் தென்பாடார் என்னும் தன்மையால் தமக்கு பால் கொடுத்து ஆண்டருளிய பெருமானின் அடையாளங்களைச் சொல்வாராய்; நாம் உய்ய எமது தமிழாய மொழியும் எல்லா மொழிகளிலும் பெருமையுற வேதநெறி தழைத்தோங்க; அதில் மிகுந்த சீல ஒழுக்கம் சிறந்த சைவ மார்க்கம் விளங்கிட தமக்கு பால் ஊட்டிய பெருமானை அவர் அடையாளம் மொழிந்து பாடியருளுகின்றுர். தந்தையார்க்கு தமக்கு பால் ஊட்டி ஆண்ட பெருமானின் அடையாளங்கள் பேசிய அவரது திருப்பதிகம் பத்தாகும். அதில் முதலாவதை இங்கு தருகின்ருேம்:

தோடுடைய செவியன் விடைஏறி ஓர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளம்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.

எமக்கு எச்சில் மயங்கிடப் பால் ஊட்டியவர் இவர் தான்.

அவர்தான் தோடு அணிந்துகொண்ட செவியுடையவன். இடபத்து ஏறிக்கொண்டவன். சடைமீது ஒரு தூயவெண்பிறையைச் சூடிக்கொண்டவன். காட்டிடத்துள்ள சுடலையின் பொடியினை எடுத்து அணிந்து கொண்டவன். இவ்வாருக அவன் கோலமாயினும் இனி ஒன்றையுமே நான் விரும்பாது உன் உள்ளத்தை முற்றிலும் தன்பாலாக் கொண்ட கள்வன். ஒருவருக்குமே தெரியப்படாதவன். அவன் முன்னர் அழகிய தாமரைமலர் ஆசனத்திருந்து. உலகைப் படைக்கின்ற பிரமதேவர் தனது படைப்பு கைகூடும் படி முன்பு ஓர் நாள் பணிந்து போற்ற அப்பிரமதேவர்க்கு அருள் செய்த பெருமையுற்ற பிரமாபுரம் என்னும் இப் புண்ணிய தலம் மேவிய கடவுள் இவனுகும்.

முற்றல் ஆமைஇள நாகமோடு ஏனமுளைக்கொம்பவை பூண்டு
வற்றல் ஓடு கலனுப் பலிதேர்ந்து எனதுள்ளங்கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார்கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றம் ஊர்ந்தபிர மாபுரம் மேவிய பெம்மானிவன் அன்றே.

முற்றிய ஆமை ஓடும் இளம் நாகமும் பன்றியின் முளைக்கொம்பும் ஆகிய இவை ஆபரணமாகப் பூண்டு பிரமனது இரத்தம் நீங்கி வற்றிய மண்டை ஓடு பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு ஊருர் பலிதேர்ந்து நிற்பவன் என்றும் அவன் வடிவை நான்கண்டவுடன் என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வனுனுன்!. அவனே எனின் கற்பதும் கேட்பதும் ஆகிய நல்லொழுக்கம் உடையவர் பெரியோர்கள் அவனது திருப்பாதத்தைத் தொழுது போற்றிட இடபத்தை வாகனமாகக் கொண்டு அதில் ஊர்ந்து திரியும் பெருமான். இதோ பிரமபுரத்து உறைகின்ற பெருமான் இவன்தான் இப்பாலடிகில தந்தவன்.

அப்பெருமான் ஆமைஓடு பன்றிக்கொம்பு இவை அணிந்த அற்புத வரலாறு கந்தபுராணம் தக்ஷகாண்டத்தில் காண்க.

நீர்பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலா வெண்மதிசூடி
ஏர்பரந்த இன வெள்வளை சோர என்உள்ளங் கவர்கள்வன்
ஊர்பரந்த உலகின் முதலாகிய ஓருர்இது வென்னப்
பேர்பரந்த பிராமபுரம் மேவிய பெம்மான் இவனன்றே.

எம்பிரான் அவன் கங்கை நீர் பரந்திருக்கும் திருச்சடைமேல் நிலவு காலும் வெண்பிறை சூடியருளி; நல்ல எழிலுடன் பரந்த என்மேனிமீது திகழும் கையில் அணிந்த நல்லஇன வெள்ளை வளையலும் சோரஊனையும் உருக்கிட தழுவி (இங்கு தம்மைஓர் பெண்ணுகப் பாவித்தவாறு)என்உள்ளத்தைக்கவர்ந்த கள்வன். அவன் ஊர்பலவாகப் பரந்த இந்த உலகில்முதலாய ஓர் ஊர் என்று தனிச்சிறப்புடன் பேசப்படும் பெருமை உடைய பலபேர்களுடன் பரந்த பிரமாபுரம் மேவிய கடவுள் இவன்தான் எனக்குப் பாலடிசில் தந்தவன்.

பேர்பரந்த— இது பிரமாபுரத்தை சீகாழி தோணிபுரம் கொச்சைபுறவம் கழுமலம் முதலியபல பெயருடன் அழைக்கப்படலால் அவ்வாறு மொழிகின்றுர்.

விண்மகிழ்ந்த மதில்எய்தது மன்றி விளங்கு தலையோட்டில்
உண்மகிழ்ந்து பலிதேரிய வந்தென துள்ளங்கவர் கள்வன்
மண்மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை மலிந்தவரை மார்பில்
பெண்மகிழ்ந்த பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

எம்பிரானுடைய சாமர்த்திய அற்புதம் இப்பாடலில் சொல்கின்றுர். அவர் வானில் உலவி தேவர்களை இம்சித்தலில் மகிழ்வுற்ற அசுரர் வாழும் மூன்றுமதில்களை அம்பால் எய்து எரித்ததும் அல்லாமல் பிரமன் சிரமாக விளங்கும் மண்டைஓட்டில் உண்ணலை மகிழ்ந்து அதற்கென பிச்சை ஏற்றிடக் கொண்டு வருபவன்.அவனே எனது உள்ளம் கவர்ந்த கள்வன். அவன் புற்றில் வாழ்தலை மகிழ்ந்த பாம்பு கொன்றைமலர் மலிந்திடச்சூடிய மலைபோலும் தன்மார்பில் பெண்ணை (உமையை) அணைத்து மகிழ்ந்த பெருமான். அவன் இப்பிரமபுரத்து மேவினுேன் எனக்கு பால்அடிசில் ஈந்தான்.

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடையூரும் இவனென்ன
அருமையாகஉரை செய்ய அமர்ந்து எனது உள்ளங்கவர் கள்வன்
கருமைபெற்ற கடல் கொள்ள மிதந்தோர் காலம் இதுவென்ன
பெருமைபெற்ற பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

நான் ஏகனுயவன். அருளாய உமையுடன் இருவராக உடையவன். அவனை இடபத்தை ஊரும் இவன் என்று அருமையாக உரை செய்யப்பட இங்கு வந்து எனது உள்ளங் கவரும் கள்வனுனுன். கருமை பெற்ற கடல் உலகை அமிழ்த்துக் கொள்ளும் பிரளய காலத்து இத்தலம் மட்டும் ஆழாது கடல்மேல் மிதந்து இதற்கு மட்டும் அழியாத காலம் இது வென்னப் பெருமை பெற்ற பிரமாபுரத் தலத்து மேவிய கடவுள் இவன்தான் பால் அடிசில் தநதவன்.

மறைகலந்த ஒலிபாடலோ டாடலராகி மழுவேந்தி
இறை கலந்த இனவெள் வளைசோர என்உள்ளங் கவர்கள்வன்
கறைகலந்த கடியார் பொழில் நீடுயர் சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரமேவிய பெம்மானி வனன்றே.

வேதம் கலந்த ஒலியுடைய பாடலோடு ஆடலராகி அழகிய கையில் மழுவேந்தி; பெருமைப்பாடு கலந்த நல் இனத்து என் வெள்ளைய வளையல் சோர நான் மயங்கும்படி என் உள்ளம் கவரும் கள்வன். அவன் கருமை கலந்த வாசம் நிறைந்துவீசிட படர்ந்து நீள உயர்ந்த சோலைகள் சூரியனது ஒளிக் கிரணங்களை கீழ் வராத படி நீக்கிட நிழல்தரும் பிரமாபுரம் என்னும் இத் தலத்து இளம்பிறை கலந்த முடியுடையவனுகி இருந்திடும் கடவுள் அவன் அன்றே.

சடைமுயங்கு புனலன் அனலன் எரிவீசிச்சதிர் வெய்த
உடைமுயங்கு அரவோடு ழிதந்தென துள்ளங் கவர் கள்வன்
கடல்முயங்கு கழி சூள் குளிர் கானல் அம் பொன்னம் சிற கன்னம்
பெடைமுயங்கு பிரமா புரமேவிய பெம்மா னிவ னன்றே.

திருச்சடை மீது ஒளிரும் கங்கை நீருடையவன் அக்கினியை ஏந்தியவன் அந்த அக்கினியை திருக்கையில் வீசி சிறந்தகக்சின் உடையாக விளங்கும் நாகபாம்புடன் உழன்று திரிந்தும் எனது உள்ளம் கவர்ந்த கள்வன். அவன் கடல் கரையில் விளங்கும் கழித்துறை நீரில் அழகிய பொன்னின் சிறகுடைய அன்னம் பெடையுடன் கூடி விளையாடும் பிரமாபுர மேவிய கடவுள். இவன் தான் பால் அடிசில் சந்தோன்.

வியரிலங்கு வரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயரிலங்கை அரையன் வலிசெற்று என துள்ளங் கவர் கள்வன்
துயரிலங்கும் உலகிற்பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமா புர மேவிய பெம்மா னிவனன்றே.

அற்புதம் மிளிரும் திருக்கைலாய மலையை தூக்கிய தோள்களினுல் வீரம் விளைவித்த உயர்ந்த இலங்கைக்கு அரசன் இராவணனது வலியடக்கி எனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன். எதுவாகிலும் துயரமே பெருகும் இந்த உலகில் பல ஊழிக்காலங்கள் தோன்றும் பொழுதெல்லாம் தான் அதில் ஆழாது தன் பெயர் இலங்கிட இருக்கும் இப்பிரமா புரமேவிய பெருமான் இவனே பாலடிசில் ஈந்தோன்.

தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரை யானும்
நீணுதல் செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர் கள்வன்
வாணுதல் செய்மக ளீர்முதலாகிய வையத்தவ ரேத்தப்
பேணுதல் செய்பிரமா புரமேவிய பெம்மானி வனன்றே.

தானே தன்னைப் பிரமம் என சாதித்துக் கொண்ட திருமாலுடன் குளிர்ந்த தாமரையாசனரான பிரமனும் நீண்டு வானிற் பறந்தும் அகழ்ந்தும் தேடி முடியாமல் போக அன்ருெரு சோதியாய் நிமிர்ந்தவன். எனது உள்ளம் கவர்ந்த கள்வன். அவன் வாள்போல் வளைந்த அழகிய நெற்றியுடைய பெண்கள் முதலாக இவ்வுலகில் உள்ளார் வணங்கிட அவரைப் பேணுதல் செய்து பேரருள் ஈயும் பிரமாபுரத்து மேவிய கடவுள் இவனன்றே பால்அடிசில் ஈந்தவன்.

புத்த ரோடு பொறி யில் சமணும் புறங் கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உல கம்பலி தேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
மத்தயானை மறு கவ்வுரி போர்த்ததோர் மாயம் இது வென்னப்
பித்தர் போலும் பிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே

புத்தர்களுடன் நல்அறிவு அடக்கம் இவையில்லாத சமணரும் புறங்கூறி; சைவர்கள் பேணும் இதுவும் ஒரு கடவுளோ என்று தங்கள் இயல்பிற்கு ஒத்தன சொல்ல உலகத்துபலி தேர்ந்து எனது உள்ளத்தைக் கவரும் கள்வன். அன்று கயா சூரன்என்னும் மத யானையை அது மயங்கிப் பதைப்ப அதன் தோலை உரித்து அத்தோலை போர்த்தருளிய ஒரு பைத்திய காரனைப் போன்றவனே அவன். என்ருலும் இப்பிரமா புரத்தலத்தில் மேவிய கடவுள். காண அரிதாயவன் இவன் தான் எனக்கு பால் அடிசில் தந்து ஆண்டவன்.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மானிவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

அருள்நெறியாய வேதம் வல்ல முனிவன்; அகன்ற குளத்தின் கரைமீது பெருநெறியாய பிரமாபுரத்தலக்தில் மேவிய இக்கடவுளை வேறொரு நினைப்புமின்றி ஒருநெறியாக மனம் வைத்து உணரும் ஞானசம்பந்தன். அவன் பாடிய திருவுடைய நெறிதரும் இத்தமிழ் வல்லவரின் மிகுபழமையாய வினை தீர்தல் எளிதாகும்.

இதனைப்பாடி பால் ஈந்து தம்மை ஆண்டு உய்யக்கொண்ட பெருமானின் வேடங்கள் பற்றி தந்தையாம் அம்முனிவர்க்கு எடுத்து மொழிதலும் தந்தையார் என்செய்தார்! அடிக்க எடுத்த கம்பு விழுந்தது அறியாது மலர் போலும் தமது கைகளை உச்சிமீது குவித்து மகிழ்ந்து கூத்தாடி தம்உள்ளத்து வேருக இந்த அற்புதப் பாடலால் விளைந்த ஆச்சரியம் அற்புதம் பரவசம் இவற்றுடன் நினைக்க நினைகக அப்பாடலின் அருமை விரும்பிய மலர்ச்சியுடன் திருமகனர் பாடிய அரியதமிழின் குறிப்பினை இப்பொழுது உணர்ந்து திருமகனுர்க்கு பால் ஈந்தவன் பரமனே எனத்தெளிகின்றுர். சிவ சிவ.

திருவடிவும் திருவருளும்

ஆன்மாக்கள் அடையக் கூடிய பெரும் பேறுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய பேறு இறைவன் திருவருட் பேறேயாகும் அதனையே உமாபதி சிவாச்சாரியார்.

''அருளிற் பெரியதகிலத்து வேண்டும்
பொருளிற்றலையிலது போல்''

என்கின்றுர்.

உலகில் வாழும் மக்கள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருள்களை மிக மிக இன்றியமையாததாகக் கொள்வர். கோடி பொன்னைக் கொண்டு பாலைவனத்துக் கூடாகச் செல்லு மொருவன் நீர் வேட்கையால் வருந்தும் பொழுது தன் முழுப் பொன்னையும் கொடுத்தாயினும் ஒரு குவளை நீர் பெற்று உயிர் வாழ எண்ணுவான. உலகப் பற்றுக்களில் அழுந்தி அல்லலுறும் ஆன்மா நிலையான பேரின்பத்தை அடைவதற்கு வழிகாட்டியாய் விளங்கும் திருவருளைப் பெறுவதற்கு எத்தகைய தியாகத்தையும் செய்ய வேண்டும்.

சூரியனுடைய ஒளியின்றி உலகம் ஒளி பெருது. இறைவனின் அருளின்றி உயிர்கள் ஞானம் பெரு. ஒரு வித்து முளை கொள்வதற்கு நிலம் மட்டும் போதாது. அந்நிலத்தை நெகிழச் செய்து விதையையும் பதப்படுத்தி முளைக்கச் செய்வதற்கு நீர் வேண்டும். திருவருளே நாம் பிறவிகள் தோறும் செய்யும் வினைகளை வகைப்படுத்தி, பக்குவப்படுத்தி பயன்பெறச் செய்து முடிவில் இறைவனிடம் நம்மை ஆற்றுப் படுத்துகின்றது.

ஆன்மா சிற்றறிவுடையது தானுக எதையும் அறியும் தன்மையற்றது. ஆனுல் அறிவித்தால் அறியும தன்மையுள்ளது. இறைவனே அறிவுக்கறிவாய் உயிருக்குயிராய் நின்று

(4—ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் நல்லார் வருத்தம் அதுநீயும் அறிதி அன்றே

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் திருப்பதிகம் பாடி பரவை அம்மையாருடன் இனிதே தங்கி இருந்திடும் நாட்களில் அவர்க்கு திருவமுதமைக்கும் பொருட்டு பொன் அன்ன செழும்பருப்பும் அமுதமைப்ப நெல்லும் வேறு நெய் முதலான திருவமுதிற்கேற்ற படித்திறன் யாவையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பால் பத்திமை கொண்ட ஓர் வேளாண் பிரபு குண்டையூர்க்கிழவர் என்னும் நாமமுடையர் தினம் தோறும் தமது இருப்பிடமான குண்டையூரிலிருந்து திருவாரூர் பரவை அம்மையார் மாளிகைக்கு அனுப்பி வருவார். அப்படி அந்த வேளான் பிரபு அனுப்பி வருகின்ற காலத்தில் வானம் மழை பொழிதலை நீங்கிட வறட்சியால் விளைவு குன்றிட பரவை அம்மை மாளிகைக்கு நெல் எடுத்திட குண்டையூர்க்கிழவரால் முடியாது போய் விட்டது. அதனால் வருத்தமுற்ற எம் பிரபு குண்டையூர்க்கிழவர் என் அப்பன் பரவை மாளிகைக்கு நெல் எடுக்க முடியாது போயிற்றே என்செய்வேன். இனி யானும் உண்பதில்லை. என எண்ணி தாம் உணவின்றி நித்திரை செய்தலும் அவர் கனவில் எம்பெருமான் தோண்றி 'சுந்தரனுக்கு உன்பால் நெல் தந்தோம்' என அருளி மறைந்திடுகின்றார். விழித்தெழுந்து கிழவர் பார்க்கின்றார், என்ன அற்புதம் குண்டையூர் முழுவதுமே நெல் மலையாக நிறைந்திருக்கிறது. அதுகண்டு மகிழ்வுற்ற கிழவர் பரவையார் கணவர் சுந்தரர் திருப்பாதமே நினைந்து தொழுது எழுந்து அந்த நெல் மலையின் பெருக்கம் கண்டு இது மனிதரால் எடுத்திடும் தன்மை அன்று. இதனை எம்பிரான் சுந்தரரிடம் நான் சென்று நேரில் சொல்லிடப் போவேன் எனப் போதலும்; எம்பெருமான் சிவனும் சுந்தரர்க்கும் கனவில் தோன்றி 'குண்டையூரில் உனக்கு நெல் தந்தோம் பெற்றுக்கொள்'' எனப்பணிப்ப அது உணர்ந்து சுந்தரரும் எழுந்து குண்டையூர் நோக்கிச் சென்றிடலும் இவரையே காண வழியில் வந்த கிழவரும் சுந்தரமூர்த்திசுவாமிகள் பாதத்தில் வீழ்ந்து பணிந்து எழுந்து நின்று ''பெருமானே ! பண்டெலாம் அடியேன் செய்த பணி இன்று முட்ட அண்டர் தம் பெருமானே உமக்கு நெல்மலை அளித்தார். அது மனிதரால் எடுத்துவரும் திறம் அன்று'' என்னலும் அது கேட்டருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் முகமலர்ந்து ''தேவாதிதேவன் அல்லவோ உமக்கு நெல்மலை கொடுத்தார்'' என பரிவு கூறி அவருடன் கூடிக் குண்டையூர் சேர்ந்து கொள்கின்றார். நெல்மலையின் அற்புதத்தை எம்சுந்தரமூர்த்தி சுவாமிகள் நோக்கி, ஈசனைப் பணிந்து இந்த நெல்மலை மனிதரால் எடுத்திடும் திறம் அன்று. இதனைத் தந்த பெருமானே திருவாரூர்க்கு இதனைக் கொண்டுசென்றிட ஆளையும்தரவேண்டும் என்று அருகாக உள்ள திருக்கோளிலி என்னும் தலத்தில் சென்று கொள்கிறார். அங்கு சென்று நெல் எடுத்துச் செல்ல ஆளிட வேண்டிக் கொள்கின்றவர் இத்திருப்பதிகத்தைப் பாடுகின்றார்.

இப்பதிகத்தில் பரவையம்மையாரின் வருத்தம் பேசப்படுகிறது. நாச்சியாரது பசி வருத்தத்தை எம்பிராக்கு தமது திருப்பதிகம் ஒவ்வொன்றிலும் எடுத்து மொழிகின்றவர் ஒரு பதிகத்து பெண்களில் நல்லவர் அயல் அறியா மனமுடையார் அத்தகைய சீருடையோர் தமது கட்டுப்பாடான வாழ்வில் எத்தகைய துயரநிலையில் இருப்பார் என்பது எம்பிரானே நீயும் அறிவாய் என்பதே!

அந்த பதிகம் இவர் பாடலில் வரும், இப்போது அவரது முழுப் பாடலையும் இங்கு தருகின்றேன்.

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

எம்பெருமானே என் வாழ்வில் உம்மை நீள நினைந்து நித்தலும் நான் கைதொழுவேன். அப்படியாய அடியேற்கு என் காதலி வாள்போலும் கூர்மை நிறைந்த கண்ணுடைய மடமெனும் குணமுடைய பரவை (மடம் என்னும் குணத்து அடக்கம் அமைதி பொறுமை சாந்தம் இவற்றின் இயல்புகள் இருப்பவை) அவள் உணவின்றி பசியால் வாடி வருந்திடாமல் திருக்கோளிலி என்னும் தலத்திருக்கும் என் அப்பனே! குண்டையூரில் சில நெல்லுப் பெற்றேன். அவற்றை திருவாரூர் எடுத்துச் செல்ல எனக்கு ஆளில்லை. ஆதலால் திருவாரூர்க்கு அந்த நெல் கொண்டு அட்டித்திட நீ அதற்கு வகை செய்வாய்.

வண்டம ருங்குழலாள் உமை நங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன் றெரி செய்தஎம் வேதியனே
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே.

2: வண்டுகள் மொய்த்திடும் கூந்தலுடையாள் உமையம்மையாரை உமது திருமேனியில் ஒரு பங்காக உடையவனே! வானில் துயர் செய்த அசுரரது புரங்கள் மூன்றினையும் எரிசெய்த எம் அந்தணனே! தெள்ளிய திரை கொண்ட நீர் தேக்கங்களுடையவயல் சூழும் திருக்கோளிலி என்னும் தலத்து எல்லா அண்டங்களாய் முளைத்து எழுந்து பரந்தவனே! அந்த நெல்லை எமது திருவாரூர் எடுத்துச் சென்று அட்டி போடப் ஆட்களைப் பணித்தருளாய்.

பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல் லார் வருத்தம் அதுநீயும் அறிதியன்றே
கோதில் பொழில்புடைசூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை அட்டித் தரப்பணியே.

3: உமது உடலில் பாதியாக ஒரு பெண்ணை வைத்தாய்! படர விளங்கிடும் சடைமீது கங்கையை வைத்தாய் (அவளும் ஒரு பெண்) ஆதலால் அம்மாதரை வைத்திருக்கும் நீ மாதர்களில் நல்ஒழுக்கமுடையாரின் வருத்தம். அது நீயும் அறிவாய் அல்லவோ! பெருமானே கோதில்லாத சோலைகள் புடைசூழும் குண்டையூரில் சில நெல்லை நான் பெற்றுள்ளேன்! எல்லார்க்கும் ஆதியே என் அற்புதனே! அவற்றை எனது திருவாரூர் எடுத்துச் சென்று அட்டித்தர நீயே ஆட்களையும் பணித்திடுவாய்.

சொல்லுவ தென்னுனைநான் தொண்டை வாயுமை நங்கையைநீ
புல்கி இடத்தில் வைத்தாய்க் கொரு பூசல்செய் தார்உளரோ
கொல்லை வளம்புறவிற் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே.

4. நான் உனக்கு வேறு என்னதைச் சொல்வேன்! தொண்டையங் கனி போலும் வாயுடைய உமையம்மையாரை நீ அணைத்து இடப்பக்கத்தில் வைத்திருக்கின்றாய். அப்படி வைத்திருக்கும் உன்னை யாரேனும் ஏன் அப்படி நீ ஒரு யோகியாக இருந்தும் பெண்ணை வைத்தாய் என்று சண்டை செய்திட்டார் (பூசல் செய்தார்) ஆரேனும் இதுகாறும் உண்டா? இல்லையே! ஆதலால் நானும் தடுத்தாளப்பெற்று தவ நெறிக்கு உரியவனுனும் பரவையை உனதருளையுடன் மணந்தது அவள் முலைச்சுவடே சார்பாகி பன்னுளும் பயில்யோகம் பரம்பரையில் பயில்வதற்காகும். ஆதலின் அது சரி. எனவே அவள் பசித்திருக்க ஆண்ட நீ பார்த்திருக்க முடியாது! என்றபடி. ஆதலின் கொல்லை நிலத்திலும் பெருவளம் தரும் சோலைகள் சூழ்ந்த குண்டையூரில் சில நெல்லை நான் பெற்றேன். எனது பரவை பசி, வருத்தம், நெல்லை அங்கு கொண்டுபோவதில் எனக்குற்ற அல்லல் இவை யாவும் நீக்கி என் ஐயனே அந்நெல்லை திருவாரூரில் அட்டித்தரப் பணியாய்!

முல்லை முறுவல்உமை ஒரு பங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலையிற் பலி கொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி எம்பெருமான்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே.

5. முல்லைப் பூவின் மொட்டுப் போலும் முறுவல் உடை உமைஅம்மையை ஒரு பங்குடைய முக்கண் மூர்த்தியே! பல் சோர்ந்த வெள்ளிய தலை ஓட்டில் பலிகொண்டு திரியும் பாசுபத வேடமுடையாய்! கொல்லை நிலத்து வளம் தரும் சோலையுடைய திருக்கோளிலியில் எம்பெருமானே! என் அல்லல் எல்லாம் அகற்றி அடியேனுக்கு அந்த நெல்லை திருவாரூரில் அட்டித்தரப் பணிப்பாய்.

குரவம ருங்குழலாள் உமை நங்கைஓர் பங்குடையாய்
பரவை பசிவருத்தம் அது நீயும் அறிதியன்றே
குரவம ரும்பொழில்சூழ் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை அட்டித் தரப்பணியே.

6: குரவ மலர் சூடும் கூந்தலுடையாள் உமை அம்மையை ஒரு பங்காக உடையவனே! பரவை அம்மையின் பசி வருத்தம் அது நீயும் அறிவாய் அல்லவோ! குரா மரங்கள் சேர்ந்த சோலை சூழும் குண்டையூரில் எம்பிரானே நான் சில நெல்லுப் பெற்றேன். நாகபாம்பினைக் கச்சாக அணிந்தவனே! அந்த நெல்லை எனக்குத் திருவாரூரில் கொண்டு சென்று அடுக்கி வைத்திடப் பணிப்பாய்.

எம்பெரு மானுனையே நினைந் தேத்துவன் எப்பொழுதும்
வம்பம ருங்குழலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகைசூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அன்பது வாயடியேற் கவை அட்டித் தரப்பணியே.

7: எம்பெருமானே! உன்னையே நினைந்து தொழுவேன் எப்பொழுதும். (உன்னையன்றி வேறொரு கடவுளை என் சிந்தையிலில் நினையேனே!) வாசனை விளங்கும் கூந்தலுடைய உமையம்மையாரை ஒரு பாகமாக விளங்குபவனே! செம்பொன்னின் மாளிகைகள் சூழ்ந்த திருக்கோளிலியில் அமர்ந்த எம்பெருமானே! என்மீது அன்பாகி அடியேற்கு அந்த நெல்லைத் திருவாரூரில் அட்டி செய்திடப் பணித்திடுவாய்.

அரக்கன் முடிகரங்கள் அடர்த் திட்டஎம் ஆதிப்பிரான்
பரக்கும் அரவல்குலாள் பரவையவள் வாடுகின்றாள்
குரக்கினங்கள் குதிகொள் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கம தாயடியேற் கவை அட்டித் தரப்பணியே.

8: இலங்கையாண்ட இராவணனான அரக்கன் முடி கைகள் அவை நெரித்திட்ட எம் ஆதிப்பெருமானே! பரக்கும் படமுடைய நாகபாம்புபோலும் அல்குலுடைய பரவை அவள் உண்மையாக பசியால் வாடுகின்றாள். நெல் அங்கு இல்லை. ஆதலின் குரங்கின் இனங்கள் துள்ளிக் குதித்து விளையாடும் குண்டையூரில் சில நெல்லினை நான் பெற்றுக்கொண்டேன். என்மீது இரக்கமதாய் அடியேற்கு அதனைத் திருவாரூர் கொண்டு சென்று அட்டித்தரப் பணிப்பாய்.

பண்டைய மால்பிரமன் பறந் தும்மிடந் தும்அயர்ந்தும்
கண்டில ராயவர்கள் கழல் காண்பரி தாயபிரான்
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே.

9. முன்னைய கடவுளான திருமால் பிரமன் வானில் பறந்தும் பூமியை இடந்து கீழ்ப் போய் அடிமுடி தேடிக் களைத்துச் சோர்ந்து காணமுடியாதவர்களாகி இன்னும் திருவடி காணமுடியாத எம்பெருமானே! எல்லா அண்டமுமாயவனே! என் ஐயனே! அந்த நெல்லை நீ திருவாரூரில் அட்டிசெய்திடப் பணித்திடுவாய்.

கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந் தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகின் அண்டர் வானுல காள்பவரே.

10: கொல்லைகள் வளம் தரும் சோலையுடைய திருக்கோளிலி மேய எம்பெருமானை நல்லவராய் உத்தமராய் விளங்கிடும் அவர் வணங்கும் திருநாவலூரில் வந்த அவன் (சுந்தரன்) தன் நெல்லை எடுத்து அட்டி செய்ய ஆட்கள் வேண்டி என் ஐயனை நினைந்து ஏத்திய பத்துப் பாடலும் மனனம் செய்து பாட வல்லவர் தமது அல்லல் யாவும் களையப் பெற்று உலகின் மேலான தேவர் உலகை ஆள்வார்கள்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குருவடிவும் திரு...

உணர்த்துவதோடு உயிர்களால் உணரப்படும் எல்லாச் சடப் பொருள்களிலும் நிறைந்து நின்று உயிர்களை உணரும் படி செய்கின்றான்.

நோய்களுக்குள் தீராத நோயைப், பிணி என்பர். ஆன்மாக்களைப் பீடிக்கும் பெரும்பிணி பிறவிப்பிணி. இந்நோய்க்கு மூலகாரணம் ஆணவ மலம். இந்த மூல மலத்தை நீக்கினால் தான் பிறவிப் பிணியைக் குணப்படுத்தலாம், இம் மூல மலத்தை நீக்கும் நிலையையே இறைவனின் 'அருளல்' என்னும் தொழில் குறிக்கின்றது ஒருவனுக்கு இயல்பாகவே உடலுடன் பொருந்தியுள்ள நோயை அவனுடன் சேர்ந்துவாழும் உற்றார் உறவினரே அறிந்து அதை நீக்க வல்லர் ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவ நோயை அவ்வான்மாவுடன் கலந்து நிற்கும் திருவருளே அறியும் தன்மையுடையது.

திருவருளின் துணையின்றி ஞானத்தைப் பெறமுடியாது இத்திருவருளே மானிடத் திருமேனி கொண்டுவரும் குருவடிவமாகும். சிவனருளே பரமாச்சாரியாராய் எழுந்தருளி உயிர்களுக்கு மெய் நெறிகாட்டும். பேரருள் உருவமாகிய ஞானகுருவுக்கே அல்லாமல் ஞானம் பிறருக்கு அமையாது. சூரியனுக்குள்ள ஒளி அதைக்காணும் கண்ணுக்கு வராது. ஞானச்சாரியாராகிய குருவுக்கே எல்லாம் அறியும் முற்றறிவுண்டு. ஞானநூல்களை ஞானச்சாரியாரின் துணையின்றிக் கற்க முடியாது, அதனாலன்றோ குருவில்லா வித்தைபாழ்என்றுவழங்கப்படுகின்றது திருவருள் மானிட வடிவம் தாங்கி வருவதன் நோக்கம், ஒரு விலங்கைப் பிடிப்பவர் அதே இனத்தில் பழக்கப்பட்ட விலங்கைப்பயன்படுத்துவர். மானைப் பிடிப்பவர் பழக்கப்பட்ட பார்வைமானைப் பயன்படுத்துவர். ஆன்மாக்களைத் தன்வசப்படுத்தும் இறைவன் நம்மைப் போன்ற வடிவம் கொண்ட குருவாகவே தோன்றி ஆட்கொள்கின்றான். அதனாலேதான் உமாபதி சிவாச்சாரியார் குருவின் திருவருளாலேதான் வீட்டின்பத்தை அடையலாம் என்னும் பொருள்பட,

''ஆரறிவாரெல்லா மகன்ற
நெறியருளும்
பேரறிவன் வாராத பின்,,
என்று கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருஞான சம்பந்தர் குருபூசை

இன்று திருஞானசம்பந்தப் பெருமான் திருப்பெருமண நல்லூரிலே பிரம விஷ்ணுக்களும் காண்டற்கரிய சோதியுடன்; தமது திருமணம் காணவந்த யாவருடனும் தமது திருக்கைபற்றிய மனைவியாருடனும் இந்த மானிட உடம்புடன் கலந்து பேரின்ப வாழ்வு பெற்ற நல்ல நாளினை நினைவுபடுத்திடவரும் அந்த திருவுடைய மூல நட்சத்திரத்தினில்நாம் அவரைப்போற்றி அடியார்கட்கு அமுதூட்டியும் வழிபாடார்ற்றியும் விழாக்கொள்ளும் புண்ணிய நாளாகும்.

வேதநெறி தழைத்திட சைவத்தின் நீதிநிலவிட அவதரித்து உலகை எம்மை வாழ்வித்த பெருமானது குருபூசைத் தினத்தின்று எமது தீபமும் அவரது திருப்பாதத்திற்கு மும்முறை வலஞக வலங் கொண்டு பணிந்து கொண்டு உதயமாகிறது.

திருஞான சம்பந்தப் பெருமானை பெரியபுராணத்து மிக அற்புதமாகவும் புனிதமாகவும் போற்றுகிறர் சேக்கிழார். அவர் திருஞானசம்பந்தப் பெருமானை தமது அறிவின் அகக்கண்ணல் கண்டு பின்னர் தமது பாடலால் போற்றி அவர் சிறப்பைக் காண்பிக்கின்ற அற்புதமான பகுதியை ஈண்டு தருகின்றேம்.

திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனல் ஞானப்பால் கொடுத்து ஆண்டருளிய பின் தந்தையார்க்கு பால் கொடுத்தவர் இவர்தான் என பதிகம்பாடி நேராகத் திருப்பிரமபுரக் கோவிலுக்கு முன் செல்கின்றர். தந்தையாரும் கூப்பிய கையுடன் பின் செல்கின்றர். கோவில் சென்று எம்பிரான் சம்பந்தர் தந்தையார்க்கு இங்கு ''எனை ஆளுடைய பெருமான் இருந்தான் உமையோடும்'' என்று எம்பெருமான் சந்நிதி நின்று கூறினர். அப்போது அங்கு நிகழ்த்தது கண்டவரும் ஏனையோரும் தந்தமது உடலின் உரோமங்கள் சிலிர்த்திடப் பரவசமாய் இப்படியானதொரு அற்புதம் எங்கு உள்ளது என்றென்று கூறி யாவரும் கோவில் வாய்தல் சேர்கின்றர்கள். சேரும் அவர் யாவர்க்குமே அறியும்படி அந்த இறைவன் இறைவியுடன் சிறப்புடன் இருக்கும் வகை இன்னெரு தேவாரப் பதிகமாகவே பின்னரும்பாடி அதனை அருள் செய்தின்றர்.

இவ்வாறு அப்பனை, சிவனை உமையுடன் அங்கு வணங்கி அருள்பெற்ற தொடர்புடன் பல அந்தணர்கள் சூழ நின்றர் காணும்படி தமது மாளிகைக்குக் கோவிலின் நின்று புறப்படுகின்றர். அந்நேரம் அருள்பெற்ற எம் சம்பந்தப்பெருமான் திருமுன்பு நீண்ட நிலையுடைய கோபுர வாய்தலிக்கு நேராக வந்து சேரும் சிவனடியார்களும் ஏனைய அந்தணர்களும் அந்த தோணிபுரத்து மக்களும் அவரை வரவேற்றெதிர்கொணடு துதிக்கின்றர்கள். நாம் இறைவனை முன்நின்று போற்றிடும் வண்ணம்போல்.

அத்துதியினை பெரிய புராணத்து சேக்கிழார் மொழிவதை இவ்விடம் அதன் கருத்துடன் தருகின்றேம்.

''காழியர் தவமே! கவுணியர் தனமே] கலைஞானத்(து)
ஆழிய கடலே! அதனிடை அமுதே! அடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானேர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தன்திரு வருள்பெற் றனை'' என்பார்.

சீகாழி உள்ளார் செய்த தவமே! கவுணியர் கோத்திரத்தின் தனமே! கலைகளின் ஞானமாய ஆழ்ந்த கடலே! அதனிடத்து விளையும் அமுதே! அடியார்கள் முன்பு வாழ்வு பெற்றிட வந்து இம்மண்ணின் மீது தேவர்களுக்கெல்லாம் தனிநாதன் சிவபெருமானது ஏழு இசையின் மொழிஉடைய எம்பெருமாட்டி உமையம்மையினதும் திருவருள் பெற்றனை என்றும் துதித்துக்கொள்வார்கள்.

''மறைவளர் திருவே! வைதிக நிலையே! வளர்ஞானப்
பொறையணி முகிலே! புகலியர் புகலே! பொருபொன்னித்
துறைபெறு மணியே! சுருதியின் ஒளியே! வெளியேவந்
திறையவன் உமையா ளுடனருள் தரஎய் தினை'' என்பார்.

வேதம் வளர்கின்ற செல்வமே! வைதிகத்தின் நல்நிலையே! வளர்கின்ற ஞானத்தின் பேசரிய மவுன வைப்பாகும் அழகிய கருணை முகிலே! சீகாழி மக்களுக்கு புகலிடமாய பொருளே நிகர் இலாத காவிரித்துறை (சோழநாடு) பெற்றமணியே! வேதங்களின் ஒளியே! வெளிப்பட வந்து இறையவன் உமையம்மையாருடன் அருள்தரப்பெற்றுக் கொண்டனை என்றும் துதித்திடுவார்.

''புண்ணிய முதலே! புனைமணி அரைஞா ணெடுபோதும்
கண்ணிறை கதிரே! கலைவளர் மதியே! கவின்மேவும்
பண்ணியல் கதியே! பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள்பெற்றனை'' என்பார்.

புண்ணியத்தின் முதலே! அழகுடன் சிறந்திடச் செய்த அரைஞாண் கயிற்றெடு வருகின்ற எம் கண்ணிறைந்த இளஞ்சூரியனே! கலைகள் வளர்கின்ற இளம்பிறையே! ஒரு மூன்றுவயது பருவத்தே நாம் எண்ணிய பொருளாய் நின்ற சிவமூர்த்தி அருள்தந்திட நீ பெற்றய்: உன் திருவடிகட்கு வணக்கம் எனப் போற்றினர்கள்.

அரசவண்டே!

மெய்த் தேவர் தேவன் சிவன் அவர்க்கே சென்றூது

மாணிக்க வாசகசுவாமிகள் சிவனருள் பெற்று அதன் இனிமையில் தேக்கியிருந்திடும் காலத்து உலக மக்களுக்கும் அதனை உணர்த்துவார் போன்று பாடிய பல பதிகம் உள: அவற்றில் ஒன்று திருக்கோத்தும்பீ எனும் பதிகம். அது சிவனேடு ஐக்கியப்படுவதின் இன்பத்தை வெளிப்படுத்தும் முகமாக உள்ளது. உளம் குளிர்ந்து உள்ளத்தையும் கனிந்துருகச்செய்வது. அப்பதிகத்து மாணிக்க வாசகர் சோலையில் பல மரங்களில் பூவிலுள்ள தேனுக்காக அலைந்து பறந்து திரியும் ஓர் அரச வண்டினை நோக்கி நல்வார்த்தை சொல்வது போல் அமைவது. பல வண்டினங்கள் பூவில் தேனுண்ண அலைந்தன. ஆனல் அவற்றுள் ஓர் பெருவண்டும் தினைத்தனையன்ன பூவில் தேன் உண்பதற்கு அலைந்துலைவதைக் கண்டு அதனை நோக்கி அரச வண்டே(கோத்தும்பீ) நீ உப்படி தினையரிசி அளவு தேனை உண்பதற்கு இவ்வளவு உலைச்சல்படுகின்றய். அதற்காக இரைந்து பாடுகின்றய்! வேண்டாம்! நான் சொல்வதைக் கேள்! இந்ததேன் நாவிற்குமட்டும் இனிக்கும். இதை விடுத்து இன்னெருதேன் இருக்கின்றது; அது தான் நினைத்திடும் தோறும் காணும் தோறும் பேசும் தோறும் எமது உடலிலுள்ள அனைத்து எலும்பும் உள்ளே நெக்கு நெக்கு உருகி இன்பமுற ஆனந்தத்தேன் சொரியும் ஒருவன் உளன்: அவன் நடமாடிய நம்பவனுயவன். கூத்துடைய அந்தகடவுளுக்கே நீ இரைந்து ஊதிடுவாய் என சொல்கின்றர். உண்மையில் அந்த வண்டு அதனை உணருமா! அதற்கு இவர் பாட்டின் கருத்தை உணரும் ஆற்றல் படைத்திலதே! ஆனல் அதன் தேன் உண்ண விளையும் ஆற்றலை உணர்ந்தோ; அல்லது கோத்தும்பி என்றதால் வண்டினங்களில் பகுத்தறிவு கொண்ட தொன்றுக கொண்டாரோ அதை நாம் அறியோம் ஆனல் ஒன்று மட்டும் வெளிப்படை உயிரினங்களில் பெருமை உடைய அவ்வண்டினைவிளித்தலால் பெருமையாகக் கொண்ட மனிதனையும் விளிக்கின்றர் எனக் கொள்ளலாமோ?

மனிதராகக்கொண்டால் அடுத்து மாணிக்கவாசகர் இந்த உலகத்தைப் பற்றி என்ன நினைக்கின்றர் என்பதை ஆராய்வோம். இந்த உலகம் எப்படியானது அதில்வாழும் மக்கள் எப்படியானவர்கள் என்பதை அந்த வண்டுடனே சொல்லிக் கொள்வதைப் பாருங்கள். அவர்சொல்கிறர்கோத்தும்பீ கேள் அவர் ஒரு கடவுள். இவர் அந்த தேவர். இல்லது இவர் ஒரு அவதாரபுருஷர் ஓர் கடவுள். என்றெல்லாம் உண்மையில் கடவுள் அல்லாதாரை பொய்யாயதேவரை கடவுள் என்று பேசிப்பாடிப் புலம்பும் இயல்புடை மக்கள் வாழும் இவ்வுலகத்தே நானும் எம்பெருமானுக்கு அடியவனய் விட்டேன் என்றல் பத்து வகையான குண இயல்புகள் என்னில் காணப்படல் வேண்டும். அவைகள் உண்மையில் இல்லாதிருப்ப தாய் போல் பரிந்து என்னைத் தேடி வந்து என்பற்றுக்கள்யாவும்நீங்கநான் பற்றி நின்ற மெய்மையான தேவர் முனிவரின் தேவனும் யோகநாயகனை சிவனுக்கே நீ சென்று ஊதிடுவாய்.

அடுத்துஇன்னமும் இந்தஉலகைப் பற்றி அந்த வண்டோடு சொல்கிறர்; அதனையும் கேளுங்கள். வண்டே! இந்த உலகம் தாம் சம்பாதித்து வைத்த நிதி பெண்கள் மக்கள் தனது குலம் கல்வி என்ற இதே பையித்தியத்தில் திரியும் இயல்புடையது. இந்தப்பயித்தியம் என்றும் ஆருது: உலகம் இயங்கும் வரையும் இயங்கி இயங்கி மரணம் பிறப்பு என்ற சங்கடத்தில் மூழ்கும்: அதை விடுத்து ஒருகால் தெய்வம் உண்டெனும் சித்தம் கொள்ளாது. அப்படியாக அந்த பிறப்பு இறப்பு என்னும் சாகரத்தில் மூழ்கிடும் மனமாறு பாட்டுக்களைக் கொண்ட என்னை மாற்றி இந்த பெரிய கலக்கம் உனக்கு வேண்டாம் என்று தெளிவித்த; அதுவும் என்ன மாதிரியாக என்னை இந்த கலக்கங்கள் பற்றுது ஆட்கொண்ட வித்தகமுடைய அதிசய தேவாதிதேவன் சிவனுக்கே நீ ஊதிடுவாய்.

அடுத்து அத்தகைய வான் கருணையுடைய தேவன் அவன் யார் எனச் சொல்வேன் கேள் என அந்த வண்டிற்கு மீண்டும் சொல்கிறர்! வண்டே! அவன் தான்; தான் ஒருவனேயாக முன்தோன்றி முளைத்து எழுந்து பூமி அதன் பாகங்கள் அண்டங்கள் யாவுமாகி எத்தனையோ கிளைகளாகப் பரந்தவன். அவன் என்னை இப்பிறப்பில் ஓர் தாய் வயிற்றில் தோற்ற வைத்தான். தோற்றிய என்னை கீழ் நெறி செலாது நல் ஒழுக்கமுடையவனுக ஒழுக வைத்தான். அப்படி ஒழுகவைத்து வந்து இப்பொழுது அரசர்கள் இருக்கவேண்டிய சிவிகையிலே நாயைத் தூக்கி வைத்தது போல் என்னை; உண்மையில் அவன் தரும் பேரருளின் திறனிற்கு போதாத என்னை! மேலாக வைத்துள்ளான்! அந்தோ இதன் அருமை என்னென்று சொல்வேன்; சொல்லும்தரமுடையதன்று. அவனேஎனின் எனது தாய் எனது தந்தை அவரின் தந்தை இப்படி இப்படி எண்ணிப் பார்த்தால் நீளவே தோன்றிய எல்லா என் முன்னையோர்க்கும் முதலான கடவுள். எனது முன்னையோர் எல்லாரும் குன்றினர். ஆனல் அவன் மட்டும் குன்றுத செல்வன்! நித்தியன்! என்றும் உள்ளவன். அந்தப் பெருமானுக்கே நீ சென்று ஊது. ஊதுவாயாக இருந்தால் நீ பெறப்போகும் பேறு அளப்பரியது.

இந்வகையா எம்பிரான் மாணிக்க வாசகர் வண்டுடன் மொழிந்திடும் இந்த நான்கு பாடலையும் கீழே தருகின்றேம். ஓதி இன்புறுங்கள்!

(6—ம் பக்கம் பார்க்க)

சந்தா விபரம்

இப்பத்திரிகை சிவநெறியருளும் சைவத்தை வளர்த்திடும் பணியாகும். இது ஓர் தருமகைங்கரியம் என்றல் அது முற்றிலும் உண்மையாவது. வேறு ஒரு நோக்கமும் இல்லை. ஆகவே இதன் அச்சுச் செலவே அன்பர்களிடமிருந்து அறவாக்கப்படும். இந்த மாதமும் அடுத்த மாதமும் மாத வீதம் ஒரு பத்திரிகையாகவும் பின்னர் அடுத்தடுத்த மாதங்களில் இரண்டாகவும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும். பெரியோர்கள் அன்பர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி ஈந்து இப்பணியை ஊக்குவித்தல் மிகச் சிறந்த தொன்றுகும். எனினும் பலரும் வாசித்து இன்புற்றுப் பயனடைய வேண்டி இதன் சந்தாவை தற்பொழுது.

அரைவருடம்	ரூபா	10 - 00
ஒரு வருடம்	,,	16 - 00

ஆக நிர்ணயித்துள்ளோம்.

பணமனுப்பும் விலாசம்:

வை. நல்லையா,
இலங்கைமணி சைவநூற் பதிப்பகம்,
உயரப்புலம், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழின் பந்தம்

உலகில் உள்ள பல மொழிகளில் தமிழ் மொழி தனித்த ஒரு பெருமை உடையது எனெனில் அதன் இனிமை நோக்கி. தமிழை ஒருவன் கற்றால் அது கற்பவனுக்கு வேறு எந்த ஒரு மொழியையும் கற்கும் ஆர்வத்திலும் தனித்த ஓர் ஆர்வத்தைத் தந்திடுகின்றது. இது இந்த மொழியின் பால் இயல்பில் உள்ள சிறப்பு. பல மலர்கள் உலகில் உண்டு. ஆனால் மக்கள் அந்த மலர்களில் சில சிறந்த மலர்களையே அதன் வாசனையாலும் அழகாலும் விரும்பி அணிந்து கொள்வர். இதே போன்று தமிழ் மொழிக்கும் தம்பால் விரும்பிட வைத்திடும் ஒரு திருவை அது பெற்றிருக்கிறது. அதனாலே தான் தமிழ் மொழி உலகில் உள்ள வேறு எந்த மொழிகளிலும் பார்க்க கூடிய காவியங்களை பாடல்களைக் கொண்டு இன்று சிறந்திருக்கின்றது.

உலகில் ஞானிகளாய் இருப்பவர் பந்தங்களை நீங்கியவராக விளங்குவது இயல்பு. அவர்கள் தம் பால் எழக் கூடிய எந்த விதமான ஆசையின் சிக்கல்களையும் கட்டுகளையும் வேரோடு அறுத்திட வல்லவர். இந்த ஞானிகளிலே தனித்த ஒரு பெரும் சிறப்புடையவர் எங்கள் 'ஞான முனிவர் திருஞானசம்பந்தப்பெருமான். அப்பெருமான் பந்தம் யாவும்நீங்கிடுவாராயினும் இந்த தமிழ் மீது கொண்ட பற்று அளவிறந்தது.உண்மையில் தமிழ் மொழி தனித்த ஒரு சிறப்பை அடைந்தது திருஞானசம்பந்தப் பெருமானது தேவாரப்பதிகங்களால் என்றால் அது ஒரு பெரிய உண்மையாகும். வடமொழியாய ஆரியம் இறைத்தன்மை பெற்றது நான்கு வேதங்களும் அதனிடத்து இருப்பதால். இந்த நான்கு வேதங்களையும் போன்று நான்கு வகையான பண்வகையால் சிறந்த தமிழ் வேதம் பாடியுள்ளார் திருஞானசம்பந்தர். இவரது பதிகத்து திருவிருக்குக்குறள் என்ற பதிகம் உண்டு. இதனை உற்று நோக்கினால் வடமொழியில் உள்ள இருக்கு வேதமாண்புபோலவே அமையும். இப்படி ஏனைய மூன்று வேதங்கட்கு உரிய வகையாய பல பாடல்கள் எம்பிரான் சம்பந்தரது தமிழ் வேதத்து உண்டு.

பெரிய புராணம் பாடிய சேக்கிழார் திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தைஅதி அற்புதமாக ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தாறு பாடலால் பாடியுள்ளார். அப்பாடல்களில் எம்பிரான் சம்பந்தரை எடுத்து மொழியும் போது ''முத்தமிழ் விரகர்'' என்றே பாடியுள்ளார். அன்றியும் சம்பந்தப்பெருமானுக்கு தமிழ் மீது இருந்த பற்றை இன்னமும் வெளிப்படுத்திட ஓர் வரலாற்றில் அதனை அற்புதமாகக் காண்பிக்கின்றார்.

திருஞானசம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு சுவாமிகளுமாக இருவரும் பல தலங்களை எல்லாம் சென்று தரிசித்து வருங்கால் வேதங்கள் தேவ வடிவுடன் பூசித்து வழிபட்டமையால் திருமறைக்காடு அல்லது வேதாரணியம் என்னும் தலத்திற்கு வந்து சேர்கின்றார்கள்.

அங்கு வந்ததும் கோயில் வாய்தலைக் குறுகினார்கள். அப்போது அந்த வாய்தற்கதவம் சாத்தி காப்பிடப்பட்டு இருப்பபதைக் கண்டார்கள். ஆனால் வழிபடும் அன்பர்கள் அவ்வழியால் சென்றிடாது அயலே ஒரு வழியால் உட்செல்வதையும கண்டார்கள். அதன் தம்மையை அடியார்களிடத்து கேட்டறியும் பொழுது அவர்கள் சொல்வார். ஐயனே! இந்த தலத்து வேதங்கள் எம் ஈசனைப் பூசித்து இந்த நேர் வாயில் கதவை காப்பிட்டு(பூட்டி) வைத்துச் சென்றுள்ளன. அக்காலம் தொடக்கம் வேதங்கள் காப்பிட்ட திருக்கதவத்தை யாருமே திறந்திட முன்வரவில்லை. அதனால் நாம் இதோ இருக்கும் வேறொரு வாய்தல் வகுத்து உட்சென்று எம்பெருமானை வழிபட்டு வருகின்றோம் என்று கூறலும் அதனை சம்பந்தப்பெருமான் கேட்டலும் வியப்படைந்து நின்று திருநாவுக்கரசர்க்குசொல்கின்றார் எப்படி; ''அப்பரே! இந்த திருமறைக் காட்டு எம் ஐயரை அவர் கோவிலின் நேர் வாய்தலைத் திறந்து உள் புகுந்து எந்த வகையாலும் நாம் வணங்க வேண்டும். ஆதலின் நீரே இந்த நேர்வாயிலிலே உள்ள வேதங்கள் பூட்டி வைத்த திருக்கதவம் காப்புநீங்குமாறு மெய்ப் பொருள் வண்தமிழ் பாடி அருளும் என மொழிகின்றார். பாருங்கள்!; அந்தவேதங்கள் வட.மொழியில் மொழிந்து சாத்திக்காப்பிட்ட திருக்கதவத்தை தென்மொழியாய தமிழ் பாடித் திறந்திடவேண்டும். அதுவும் அந்ததமிழ் எவ்வாறு உளது என்றால் மெய்ப்பொருள் வண்தமிழ் என மொழியப்படுகிறது. அந்தத் தமிழ் உலகில் உள்ள நிலையாமையைப் போன்ற பொருள்களை தரவல்லதல்ல. ஆனால் என்றும் அழிவற்ற உண்மைப் பொருளைத் தரவல்ல தமிழ் பாடும் என அதன் அருமை வலியுறுத்தி அருள் செய்யப்பட்டது. அப்போது அத்தமிழின் மீது இருந்தபற்று எவ்வளவு உறுதி உடையது. சிந்தித்துப் பாருங்கள். இது தான் அம் மொழிமீது கொண்ட பந்தம் என்றால் உண்மை தானே! அப்படியே திருநாவுக்கரசர் பெருமான் செந்தமிழ் பதிகம்பாடிட எம்பெருமானுடைய கோவிலின் நேர் வாயில் கதவம் திறந்து கொள்கின்றது. உலகம் இதன் அற்புதம் கண்டு போற்றுகிறது. அவ்வாயிலூடாக உட்செல்கின்றனர். எம்பெருமக்கள் இருவரும்எம்பிரானைவணங்கி மீண்டு அவ்வாயில் ஊடாக வருகிறார்கள். வெளியில் வந்ததும் சம்பந்தப் பெருமானை அப்பர் நோக்கி ஐயனே! நாம் திறந்து உட்சென்றோம் அதே போல் திருக்கதவம் சாத்தி காப்பிடச் செய்துபோதல்வேண்டும்ஆதலால் நீர் செந்தமிழ் உறைக்கப்பாடி அடைப்பியும்எனவேண்டுகின்றார் சம்பந்தப்பெருமானை. அப்போது சம்பந்தப் பெருமான் தமிழ் மறைபாட எடுத்தலும் எடுத்த திருப்பாட்டில் திருக்கதவம் காப்பிட்டுக் கொண்டது. இது கண்டு அங்கு நின்ற அடியார்கள்எப்படி இருப்பார்கள்நீங்களேசிந்தித்துப் பாருங்கள்!. அந்த அற்புதம் எம்மால் மொழியும் தரமன்று.

இப்படியாகச்செந்தமிழ்பாடி திருமறைக் காட்டுத்திருக்கதவத்தை திறந்தும் அடைத்தும் அவ்வணமே அன்று தொடக்கம்நிகழ வைத்த வரம்பு காணமுடியாத பெருமை[illegible] வரையும் [illegible] கூப்பி வணங்கித் தாழ்ந்துவாழ்ந்தது கடல் சூழ்ந்தஇந்த உலகம். இந்த அற்புதமெல்லாம் செந்தமிழின் பந்தம் தானே! வடமொழியால் வேதம் காப்பிட்ட கதவம் தென்மொழியால் திறந்திடச் செய்தது செந்தமிழ்ப் பந்தம் அல்லாது வேறு என்னாகும்?

இப்படியாக திருஞானசம்பந்தப்பெருமான் பல தலங்கள் எல்லாம் சென்று எம்பிரானை வேதம் மொழிந்த தெல்லாம் தமிழ் மொழியாகவே. இந்த இயல்பை சேக்கிழார் அவரை மொழியும் போது வேதவாயர் எனவே சொல்கின்றார்.

திருஞான சம்பந்த பெருமானுமே தமது திருப்பதிகங்களின் பெருமை பகர்ந்திடும் பொழுது சம்பந்தன் தமிழ், சொற்றமிழ் ஞானசம்பந்தன் வாய்ந்து உரை செய்த சந்துலாம் தமிழ், இசைமலி தமிழ், என்று பல வகையால் எம்மை உணர்வுற வைத்து இவைகளை ஓதுங்கள் இவையே தவமாம் இறைவனிடம் உம்மை சேர்பனவாம்.தீங்குகளைப் பாவத்தை நீக்குவதாம், திருவைத் தருவதாம் என்று மொழிந்து எத்தனையோ தமிழ் மறைப் பதிகங்கள் பாடி உலகை உய்விக்க வைத்துள்ளார். இன்னமும் அவர் ஓரிடத்துபாடிய திருபதிகம் ஒன்றில்; பங்கமலம் அங்கு அணி கொள்ள திண்புகலி ஞானசம்பந்தன் உரை செய் சங்கமலி செந்தமிழ்கள் என ஓதுகின்றார். பாருங்கள் அவருடைய செந்தமிழாயபதிகத்தைசங்கமலி செந்தமிழ்கள் என மொழிகின்றார். இவை என்ன அற்புதம்! என்ன சிறப்பு! என்ன பெருமை! என்ன நிறைவு.இவையாவும் எம்பெருமான் திருஞானசம்பந்தர் செந்தமிழில் மேற்கொண்ட கருணையின் பந்தம்தானே!

உண்மையில் திருஞானசம்பந்தப் பெருமானது தமிழ் மறையான பதிகம் இலவேல் எமது தமிழ் மொழிக்கு பெருமை ஏதும் இல்லை. பெரிய புராணத்து சேக்கிழாரே இதனை வலியுறுத்துகின்றார். அப்படியாக திருஞானசம்பந்தப்பெருமானின் திருவவதாரமே அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல நிகழ்ந்தது என்கின்றார்.

அதுவுமன்றி அவர் செந்தமிழின் பாடலால் தான் உலகில் உள்ளமக்களுக்கு உரை சிறந்தது. இன்றேல் மனிதன் பேசுகின்ற வார்த்தைக்கோ அல்லது பெருமையுடைய பாடலிற்கோ மதிப்பில்லை என்ற வகையால் இம் மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப என மொழிகின்றார், மேலும் பெரியபுராணத்து.

இன்னமும் இப்படியாய் திருஞானசம்பந்தப் பெருமான் உலகை உய்விக்க வந்து அவதரித்து பல தலமெலாம் சென்று தமிழ் வேதம் பாடி வேத நெறிதழைத்திடமிகுசைவத்துறை விளங்கிடச் செய்து பின்னர் திருமணம் நிகழ்வதற்கு முன் சீகாழிப் பதியில் தங்கி இருந்திடும் காலத்தில் அங்கும் தம்மை ஆண்டருளிய பெருமானைப் பல பதிகங்கள் பாடுகின்றார். இவ்வாறு அவர் பதிகங்கள் மீளவும் பாடுவதற்கு ஓர் காரணம் கண்டவர் போல சேக்கிழார்பெரியபுராணத்துஎன் சொல்கிறார் தெரியுமோ? அவர் மீளவும் பதிகம் பாடும் அதனை ''செந்தமிழின் பந்தத்தால்திருப் பதிகம் பல பாடி''என்று மொழிகின்றார் அவர் புராணத்து! இதற்கு மிஞ்சி ஏழை யடியேன் என் சொல்ல உண்டு. நீங்களே இனி உணர்ந்து கொள்ளுங்கள்.

சேக்கிழார் சொல்லிய பாடலை கீழே தருகின்றோம்

வந்தவரை எதிர்கொண்டு மனமகிழ்ந்து சண்பையர்கோன்
அந்தமில்சீர் அடியார்கள் அவரோடும் இனிதமர்ந்து
சுந்தரவா ரணங்கினுடன் தோணியில்வீற் றிருந்தாரைச்
செந்தமிழின் பந்தத்தால் திருப்பதிகம் பலபாடி

கட்டுரைகள் கவிதைகள்

எமக்கு இத்தீபத்திற்கு மேலும் கட்டுரைகளும் கவிதைகளும் வந்து சேர்ந்தன. அவற்றினை அனுப்பி உள்ளோர்க்கு நன்றி. ஆனால் இத்தீபச் சுடரில் அவைகள் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. அதற்கு எம்மை மன்னிக்கும்படி வேண்டுகின்றோம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மெய்த்தேவர் தேவர் சிவனுக்கே.....

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புஉடை யானுக்கே சென்றூதய் கோத்தும்பீ.

அத்தேவர் தேவர் அவர் தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கேசென்றூதாய் கோத்தும்பீ.

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த உலகிற் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்அனைக்குந்தம்பெருமான்
குன்றாத செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌக்கியப் பழக்கம் - 1

காலையில் துயில் எழுதல்

நாம் வேலைகளெல்லாம் முடிந்து உடல் ஆறுதலுக்கு இரவில் உறங்குகிறோம். உறக்கத்தில் எமக்கு என்ன நடக்கிறதென்பதுதெரிவதில்லை. புலப்படுவதுமில்லை. எல்லாம் மோனமாகத் தோன்றும். சஞ்சலமில்லாதவருக்கு குழப்பமில்லாத நல்ல துக்கம் வரும். சஞ்சலமுள்ளவர்க்கு இடையிடையே தூக்கம் கலையும். ஆதலால் நாம் மனத்தை வெற்று மனமாக்கிக் கொள்ளப் பழகவேண்டும். அப்போதுதான் நல்ல தூக்கம் ஏற்படும். இப்படி நல்ல தூக்கம் சௌக்கியத்திற்கு இன்றியமையாதது.

காலையில் கண் விழித்து துயிலெழவேண்டுமென்பார்க்ள். சிலர் அதிகாலையில் துயிலெழுந்துவிடுவார்கள். சிலர் விடிந்தும் வெகு நேரஞ் செல்லத்தான் துயிலெழுவார்கள். இப்படிப் பலவிதமுண்டு. காலையில் எப்போது துயிலெழவேண்டும்? தற்கால விஞ்ஞானமுறையின்படி காலை 5 மணிக்கு துயிலெழவேண்டும். இதை ஆசுப்பத்திரிகளிலும் சிகிச்சா சாலைகளிலும் நாம் காண முடியும். அங்கெல்லாம் காலை 5மணிக்கே நோயாளிகளை எழுப்பி காலைக்கடன்களை முடிக்கச் சொல்லுவார்கள்.

இது தற்கால முறை. புராதன காலத்தில் விஞ்ஞானம் முன்னேருத காலத்தில் எப்போ துயிலெழுந்தார்கள். திருநாவுக்கரசு நாயனுர் சொல்கிருர் ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா; நித்தலுமெம்பிரானுடைய கோயில் புக்கு; புலவர்தன் முன் அலகிட்டு'' நிலைபெறுமாறென்ருல் எது நிலைபெறுமாறு? இம்மானுடைய வாழ்க்கை நிலை பெறுமாரு? இல்லை உடலும் உளமும் நிலைபெறுமாறு. இப்பூமியில் இருக்குமட்டும் உடலும் உளமும் நிலை பெறுமாறு என்று நெஞ்சை அழைத்து அதற்கு புத்தி புகட்டுகின்ருர். சூரியன் உதிக்கு முன்பு புலர்வதன்முன் என்ருர். அதற்கு முன் எவ்வளவோ காரியங்களைச் செய்து முடித்து விடவேண்டும் என்று சொல்கிருர்.

இற்றைக்கு சில ஆண்?டுகளுக்குமுன் நம்முடன் வாழ்ந்த யோக சுவாமி என்னசொன்ஞர். முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ என்னும் நற் சிந்தனைப் பாடலில் ''பகலவன் எழு முன் எழுதல்'' என்று கூறுகிருர். இதற்கு காரணம் என்னவென்று ஆராய்ந்தால் ஆதவன் உதிக்க ஒரு மணி நேரத்திற்கு முன்பே தீவிர ஊதா வர்ண கதிர்கள் உலகத்தில் விழும். இக்கதிர்கள் மானிடர் உடலில் விழுவதால் அவனுக்கு உடல் உறுதியடைந்து நோயில்லாமல் வாழ்வான். அதோடு உளமும் அமைதியடையும். நேரத்தோடு தூங்கி நேரத்தோடு எழுந்திருப்பவனுக்கு சௌக்கியமும் செல்வமும் ஞானமும் உண்டாகும் என்று ஒரு ஆங்கிலப் புலவனும் கூறியிருக்கிருன், ஆதலால் சூரியன் உதிக்குமுன் துயிலெழவேண்டும்.

மெய்ஞ்ஞானிகளின் முடிபுகள்

''உலகில் இருவகையைச்சேர்ந்த மக்கள் மாத்திரமே கவலைப்படாமலிருக்கிருர்கள். அவர்களுக்கு பிரச்சினைகளே கிடையா. முதல் வகையைச் சேர்ந்தவர்கள் சீவன் முக்தர்களும் ஞானிகளும். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் சுத்த மடையர்கள். இவ் வெல்லைகளுக்கு இடைப்பட்டுள்ள நாம் எல்லோரும் வெவ்வேறு அளவிலும், வகையிலும் பிரச்சினையுடையவர்களாகவும், சஞ்சலமுடையவர்களாகவும் காணப்படுகிறோம்'' என்கிறது பாகவத புராணம். ஆம்! மனிதன் சிந்திக்கத் துவங்கியபோதே பிரச்சினைகளும் தோன்றின வென்லாம். நாம் ஏன் பிறந்தோம்? எங்கே, எதை நோக்கிச் செல்கிறோம்? இப் பிரபஞ்சம் யாரால் இயக்கப்படுகிறது? மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி ஏதும் உளதா? இவை போன்ற கேள்விகளுக்கு விடைகாண மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் முற்பட்டனர் இரு பிரிவினரும் வெவ்வேறு துறைகளிலே சென்ருலும் முடிவில் அவர்களிடையே ஒருமைப்பாட்டைக் காணலாம்.

உண்மைப் பொருளை விசாரணையாலும், பக்தியாலும் அறியலாம். விஞ்ஞானிகள் இவ்வுலகில் உள்ள பொருள்களையும், அவற்றின் தன்மைகளையும், தொழிற்பாடுகளையும் ஆராய்கின்றனர். பொருள்களைப் பிரித்துப் அவற்றின் கூறுகளைச் சேர்த்தும் அறிவைப் பெறுகின்றனர். இதுதான் விஞ்ஞான ரீதியான அறிவு. இதனுல் கற்பனைகளும், விதிகளும் உண்டாக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் உண்மையாகக் கருதப்பட்ட விதிகளும் கற்பனைகளும் சில வருடங்களின் பின்னர் பிழையாகக் கருதப்படுகின்றன. அப்போது அவை விலக்கப்பட்டு, புது விதிகள் உண்டாக்கப்படுகின்றன இந்த அடிப்படையிலேயே விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது. அது எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற சாத்னங்களைத் தந்து உதவுகின்றது. விஞ்ஞானிகள் சந்திர மண்டலம். வேறும் கோள்களுக்கும் போவதற்கு ஆயத்தங்கள் செய்கின்றனர்.

மெய்ஞ்ஞானிகளும் இப்பிரபஞ்சத்தைப் பற்றியும் அதனை உண்டாக்கிய சக்தி பற்றியும் ஆழ்ந்து சிந்தித்தனர். முற்காலத்திருந்த ரிஷிகளும், முனிவர்களும், தமது அறிவாலும் உள்ளுணர்வாலும் நாம் வியக்கத்தக்க அறிவைப்பெற்றிருந்தனர். இவ்வுலகு தோற்றுவதற்கும், அதனை இயக்குவதற்கும் இறைவன் ஒருவன் தேவை என்று கண்டனர். எம்மை வழிப்படுத்த ஒழுக்கவிதிகளும்தேவை என்றும் உணர்ந்தனர்.

சமயம் என்பது நேரடியாகப் பரிபூரணனை இறைவனை அறிவதும் அநுபவிப்பது மாகும். சமயம் மெய்யொளியை அடையச் செய்வது. உண்மைப் பொருள் சர்வவியாபகமாயிருக்கும்போது மனிதன் அதனை நேரடியாகத் தனக்குள்ளே யுணர்கிருன். உபநிடதம் இதனையே ''தத்துவமசி''—நீ அதுவாய் ஆகின்ருய் என்கிறது. உலகமக்கள் இதனையுணராமல் எங்கும் இறைவனைத்தேடி அலைகின்றனர். ''வெள்ளத்து நாவற்றி எங்கும் விடிந்திருளாம்: நற்றத்திரைவர் கடன்'' என்கிறது திருவருட்பயன்.

இக்கால இளைஞர்களில் அநேகர் விஞ்ஞானம் கற்கின்றனர். வரவேற்கத்தக்கதே! ஆனல் அவர்கள் —விஞ்ஞான மோகங்கொண்டும், விஞ்ஞான முடிவுகளுக்கு அப்பாற்பட்ட தொன்றும் இல்லை என்ற தவருன கொள்கை கொண்டு நாத்திகம் பேசுகிருர்கள்,

(8—ம் பக்கம் பார்க்க)

(2—ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தைதாய் பேண்.....

சொல்லச் செல்கின்றர் சென்றபோது தந்தை குச்சகர் மகனிடம்அவரது பிரமச்சாரியநெறிஒழுக்கங்கள்பற்றிவிசாரித்தபோது மைந்தர் தமக்குற்றபேற்றைத் தெரிவிக்கின்ருர். அதுபோது தந்தை குச்சகர் தம் மைந்தர் பெற்ற பேற்றை உணர்ந்து அவரை நோக்கி மகனே! இத்தகைய ஓர் தியான நிலை கைகூடப்பெற்ற உனக்கு உலகில் எதுதான் அரிது என பாராட்டி மொழிந்து பின்னர் மைந்தரை நோக்கி எமது குல ஆசாரப்படி நீ இதுகாறும் பிரமச்சாரிய நெறியை விதிப்படி ஒழுகினுய். இனியாக இல்லறத்தைப் பேணிடற்கு திருமணம் செய்து கொள் என வேண்டுகின்ருர். அப்போது மகனுர் தாம் மேற்கொண்டு பெறவிரும்பும் பேரின்ப நிலைக்கு திருமணம் தடையாக வரும் என்பதை உணர்ந்து தந்தையாரிடம் தமக்கு அது வேண்டாம் என்பதை ஓர் பெண்ணைத் தீண்டுவதால் வரும் தீங்குகளையும் பாவப் பெருக்கத்தையும் எடுத்துக் காட்டிக் கூறுகின்ருர். அதுகேட்ட தந்தை இல்லறம் என்ருல் ஓர் உத்தமக் கன்னியை வேத விதிப்படி திருமணம் செய்து புத்திர பாக்கியத்தின் பொருட்டு கூடினல் அதுவும் தவமாம் என பல சான்றுகளுடன் மொழிந்தாலும் மகன் கவுச்சிகர் அதை ஏற்கவில்லை அப்போது குச்சகமுனிவர் மகனைப் பார்த்து மகனே உலகில் நீ யாவும் கற்றுத் தெளிந்தவன். இப்போது நான் சொல்வதை ஏற்பதுதான் நன்றுஎன்று மொழிதலும் அப்போது மகனுர் தந்தையார் சொல்வதைச் சிந்தித்து தெளிந்து கொள்ளும் பொழுது தம் மனத்திற்கு சொல்வதை இங்கு தருகின்றேன்.

தங்கள் அருள் நிறைந்த தாய் தந்தையர் தம்மைப் பார்த்து நீங்கள் உங்கள் சுகவாழ்வை விட்டு நீங்கி கடவிடையாகப் போய் வீழுங்கள் என்று சொன்னுலும் கூட அப்போது தாய் தந்தையரிடம் உண்மையான அன்புடைய புத்திரர்களின் செயல் அப்படிச் சொன்னபடி செய்வதாகும். இது இன்று புதுமையுடைய செயல் அல்ல. நெடுங்காலமாக எத்தனையோ யுகங்களாக நடப்பது ஒன்று. ஆதலினுல் தந்தை விருப்பப்படி நான் இசைவேன்.

வேதங்களும் தந்தை சொல் மறுப்பவர் தாயின் உரை தடுப் போர்கள் குருவின் கட்டளையை நிந்திப்பவர் வழிபாட்டு முறையாகவரும் வேத நெறியை மாற்றினோர் இவர்கள் மாருத கொடும் நெருப்பாய நகரத்திடை வீழ்வார் என மொழிவன.

ஆதலின் என் தந்தை சொற்படி இசைவேன் எனக்கொண்டு தந்தையாரை வணங்கி ஐயனே! தனது சொல்லை ஏற்காது சினக்கின்ற ஓர் பெண்ணுடன் இல்வாழ்க்கை நடத்துவதிலும் அவ்வளவு காலத்தையும் கொடிய நகரத்தில் வீழ்ந்து கழிப்பது நன்று. ஆதலல் ஓர் கன்னி தன் கணவனை உண்மையான பதி எனக் கொண்டு நடப்பாள் என நாம் துணிந்திடற்கு அவளிடம் காணப்படும் குணங்களை வேதத்தின் வழி வந்த நூல்கள் விதித்தன. அவற்றின்படி ஓர் பெண்ணைத் திருமணம் செய்திட நான் இசைகின்றேன் என்றபோது அது கேட்டு உளம் குளிர்ந்து மலர்ந்து மகனுரை நோக்கி குச்சகர் மொழிவதைப் பாருங்கள்.

மகனே இப்போது எனது வார்த்தையை மறுக்காமல் நீ ஏற்றுக் கொண்டாய். அதனுல் யானும் உய்ந்தனன். என் கிளைஞரும் உய்ந்தன. நின்னைப் பெற்ற தாய் தானும் உய்ந்தனள். தவங்களும் உய்ந்தன. அது தான் மகனே கருணை என்பது. இது வன்றி வான உலகும் உய்ந்தன. மண் உலகு உய்ந்தது. இந்திரன் எனவாழும் கடவுளரும் உய்ந்தனர் எனக் கூறினுர்.

ஆதலால் ஓர் மைந்தன் ஓர் சிக்கலான விடயத்திலும் தந்தையின் சொல்லை ஏற்றுக்கொண்டார் என்றபோது அதுவே அப்பிள்ளை ஆற்றும் பெரும் வழிபாடு எனக் கொள்ளலாம். இதுவன்றிதந்தை மனம் வேதனைப் படும்படி கருமம் செய்துவிட்டு பின்னர் அப்பிள்ளை எந்த தெய்வத்திடம் வழிபாடு செய்து நல்வழியடையலாம்? அது முடியாது.

ஞான நெறியில் தலைமைப் பாடடைந்த பெரியோர்களுமே தந்தை தாயரைப் பேணி அவர் விரும்பியதைச் செய்திருக்கிருர்கள். திருஞான சம்பந்தப் பெருமான் மதுரையில் தங்கியிருந்து சமணருடன் வாதிட்டு வெற்றிகொண்டு அங்கு இருக்கும் காலத்தில் அவரிடம் அவ்வூர் அரசன்முதல்எவருமே அவர் திருமுன்புஉத்தரவு பெருமல் செல்லமுடியாது. அதுவும் வணக்கத்தின் பொருட்டே செல்லலாம். இப்படியாக இவர் இருப்ப அவர் தந்தை சிவபாத விருதயர் அவரைக் காணும் பொருட்டுச் செல்கின்ருர். அவர் வருகையைக் கேட்டுக் கொண்டதும் ''எப்பொழுது வந்தருளிற்று'' எனமொழிந்துஎழுந்துசென்று தந்தையார் எதிர்தொழுது அவர் சார்புகண்டு அதன் நினைவால் தம்மை அன்று ஆண்டருளிய பெருவாழ்வாம் பெருமானின் பாதங்கள் நினைவுற்ருர் என்றமையால் எந்த ஒரு மைந்தர்க்கும் தந்தை மூலமேயன்றி திருவருளின் பேறு சிறப்பாக இல்லை என்பது புலனுகிறது.

மாணிக்கவாசகரும்''என் தந்தை தந்தைக்கும் எம் அனைக்கும் தம் பெருமான் குன்ருத செல்வன் சிவன்'' எனமொழிந்தமையையும் நினைவு படுத்துவோம் திருநாவுக்கரசரும் மாத பிதாவாகி'' என்றும் ஈன்ருளுமாய் எனக்கு எந்தையுமாய்'' என்றும் போற்றிடும் தன்மைகளையும் நினைவு படுத்துவோம். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தாம்பாடியருளும் பதிகங்களில் திருக்கடைக் காப்புகளில் தம்மை இன்னுரெனச் சொல்லிடும் பொழுது ''சடையன் தன் காதலன்'' என தந்தையார் திருப்பெயரையும் ''இசைஞானி சிறுவன்'' எனதாயார் திருப்பெயரையும் பலவிடங்களில் மொழிந்தருளுகின்ருர். இவைகள்யாவும் தமிழினம் மிக மேம்பாட்டுடன் விளங்கிய காலத்து தமிழன் தன்னை ஆண்டு கொண்டுசிறந்திருந்தகாலத்து நடைபெற்றுக்கொண்ட பேறுகளாகின்றன. பின்னுல் சிலவேறு தேச நாகரிகங்கள் எம் மிடம் புகுந்து அது ஊறி வேர்விட்ட பொழுது தந்தை தாயரை விபரமறியாதமக்கள்என்றும் தாங்கள் விபரமறிந் தோர் என்றும் சிலமைந்தர் நினைந்து தமது தந்தை தாயரை சிறிது நிந்தனையாக நடத்திட எண்ணுவது உண்டு. இச் செயலைச் பெரியோர்கள் துட்டத்தனம் எனச் சொல்வர். ''மாதா பிதாவைப் பழித்த துட்டர்கள்'' என அருணகிரியார் மொழிதல் காண்க.

தெய்வங்களே தந்தைதாயரைப் பேணி உள்ளன. கந்தபுராணத்து முருகப் பெருமான் தெய்வநாயகியாரை திருமணம் செயும் பொருட்டு திருப் பரங்குன்றத்திடை அமைத்த திரு மண மண்டபத்து எழுந்தருளிவந்து இந்திரன் வைத்தருளிய மிக்க பொன் மணிப் பீடத்து வீற்றிருந்தருளிய பின்பு அவர் அற்புதத் திருமணம் காணும் பொருட்டுச் சிவபிரான் உமையம்மை யாருடன் அவ்விடம் தோன்றுதலும் தந்தை தாயைக் கண்டவுடன் தமது இருப்பிடத்தை விடுத்து எழுந்தருளிக்கொண்டு நடந்துசென்று எதிர் கொண்டு விரைந்து இருவோர் பாதத்தையும் முதிர்ந்த அன்பொடு தம் முடி சூடிட வணங்கினுர். பெரு மகிழ்ச்சியால் மலர்ந்து என்றமையால் சைவமக்களாகிய எமக்கு எம்மைப் பெற்ற தாய் தந்தையரை எத்துணைச் சிறப்பாகப் பேணிக் கொள்ள வேணடும் என்பது துணிவாகிறது, உண்மையில் தனது தாய்தந்தையரை மதியாத பிள்ளை தேசத்தலைவராக விளங்கினுலுமே அது போற்றற்குரிய தொன்றல்ல. தந்தை தாயை முதற் கண்பேணி நடப்பவன் எல்லா நலனுடனும் சிறந்து வாழ்வான் என்பது வேத நூற்துணிபுமாகும் சைவ மக்களின் தலையான நாகரிகமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைச் சொன்னால் திரு நிற்கும் இறைவன் நீதியாகவும் உளன்

திருநாவுக்கரசர் பெருமான் சொல்கின்றார்.

திருநாவுக்கரசுசுவாமிகள் தமது இளம் பருவத்தே உலகநிலையாமை உணர்ந்து உண்மை நிலையான பொருள் யாது என நாடி துறவினை மேற் கொண்டவர். இந்த துறவு மனப்பாங்கினால் சமணத்துறவிகளிடம் சிக்கி அவர்களது சமயத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து பின்னர் தமக்கையார் திலகவதியாரின் வழிபாட்டால் ஈசன் அவரை சமணப்படு குழியில் நின் றும் நீக்கிடக்கொடுத்த சூலை நோயினால் தாங்காது சமணத்தை விட்டு திரு வதிகைவீரண்டானத்து எம் பெருமானிடம் வந்து அவர் அருள் பெற்று சூலைநோயும் நீங்கி உண்மையான பேரின்பநிலையும் கைவரப் பெற்றுத்திகழ்ந் தவர். அவர் பெற்ற பேறு சொல்லற்கரியது. அத்தகைய பேற்றை அடைந்து அவர் அதனை ஈந்த பெருமானின் அருட்சிறப்பை உலகிற்கும் சொல்வார் போன்று பாடியருளிய தேவாரப்பதிகம் ஒன்று உண்டு. அதில் பத்து திருப்பதிகம் உள்ளன. அவற்றின் கருத்துடன் அப்பாடல்களைக் கீழே தருகின்றோம். அவற்றின் முதற்பதிகத்தின் கருத்தைச் சொல்கின் றேன்.

சிவன் என்று ஓசைதரும் வார்த்தையே அல்லாது உலகில் நாம் வேறொன் றும் உரக்கச் சொல்லோம். ஏனெனில் ஒருவர்க்கு இவ்வுலகில் திரு நின்ற செம்மையான செய்கை அதை மொழிதலிலும் பார்க்க வேறு உளதோ? இல்லை. அப்பெருமான் தான்ஓர் பிச்சை ஏற்றுண்பவன். அரையில் உடுத்தது புலித்தோலாடை. அதன்மேலாக ஓர் ஆடும் பாம்பினை கச்சாக அணிந்து கொண்டான். உள்ளம் விரும்பிய கரியுடைய சுடுகாடு அவனது கோயில். நாம் எண்ணினால் அவன் கையில் பிச்சைப்பாத்திரம் மண்டை ஓடு. இதன்தன்மையாக் அவனது தன்மை; அத்தகைய அவன் நீர்மைகண் டும் தம் உள்ளத்தை அவன் பால் கொள்பவர் தேவர்களாகிய அவர்கள்.

அத்தேவாரப்பதிகம் இதுவாகும்:—

சிவனெனும் ஓசை அல்லது அறையோம் உலகில் திரு நின்ற செம்மை உளதே
அவனுமோர் ஐயம்உண்ணி அதளாடையாவது அதன்மேல் ஓர் ஆடல் அரவம்
கவணளவுள்ள உள்கு கரி காடு கோயில் கலன் ஆவது ஓடு கருதில்
அவனது பெற்றி கண்டும் அவன் நீர்மை கண்டும் அகம்நேர்வர் தேவர் அவரே

தேவராய் இருப்பார் யாவருமே சிவனை தமது உள்ளத்தில் கொள்வார். ஆதலால் சிவ என்ற ஓசையே அல்லாது வேறு உரத்து நான் சொல்லேன் என்றவாறு. இதனால் இந்த திருநாவுக்கரசரை சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றிடும் பொழுது திரு நின்ற செம்மையே செம்மையாய்க்கொண்ட திருநாவுக்கரசன் என தாம்பாடிய அடியார்கள் திருத்தொண்டத் தொகைப் பதிகத்து ஓதுகின்றார். நீங்களும் சிவ என்று ஓதிப் பாருங்கள் திரு நிற் கின்றதோ இல்லையோ பார்ப்போம்.

இன்றைய உலகில் மனிதன் வாழ்கையின் பலதுறைகளிலும் உன்னத மான உயர்வுகளை அடைந்துள்ளான். மின்சக்தியையும் அணுசக்தியையும் தன் வசமாக்கி சுகவாழ்வுக்கு வேண்டிய போக போக்கியப் பொருள்கள் யாவற் றையும் ஆக்கி அமைத்து குபேரசெல்வம் பெற்று இந்திரபோகம் அனுபவிக் கின்றான். ஆனால் வல்லரசுகளுக்கிடையே பகையும், போட்டியும், பூசல்களும் நிலவுகின்றன. உள் நாடுகளிலும் வஞ்சமும் சூதும் சூழ்ச்சியும் அமைதியைக் குலைக்கின்றன. மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் நுகர்ச் சிப்பொருள் பற்றாக்குறையும்' தொழிலின்மையும் வாழ்க்கையைச் சின்னா பின்னப் படுத்துகின்றன. சுருங்கக்கூறின் சமுதாயத்தில் நீதி நிலவுவதில்லை. நீர்வளம், நிலவளம், மூலப்பொருள்வளம் நிரம்பியிருந்தும் நாட்டின் செல்வத்தை எல்லோரும் அனுபவிப்பதற்கேற்ற ஒழுங்குகள் ஏற்படவில்லை.

நீதி என்று சொல்லுமிடத்து அரச நீதி மட்டுமல்ல சமுதாயத்தில் ஒவ் வொருவம் தங்கட்குரிய வற்றை தடையின்றிப் பெறுவதற்கு வழிவகை களை வகுத்தல் அதுவே தலைசிறந்த நீதியாகும். கற்றோர், அறவோர், பெரி யோர் இந்த தெய்வத்தன்மை வாய்ந்த நீதியாகும் அறத்தை நிலைநாட்ட இடையறாது உழைத்தல் அது அவர் தலையாய கடமைப்பாடாகும். இறை வன் மனிதனுக்கு விவேகத்தைக்கொடுத்து அவன் மூலமே அறத்தை நிலை பெறச்செய்கிறார்.

எங்கள் நாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் ஆலயங்கள் ஒழுங்காகப் பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. இறைவனும் ஆலயங்கள் தோறும் எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவன ஈந்துகொண்டே இருக்கிறான். ஆனால் மனிதன் பக்தி சிரத்தை ஆலயத்தோடு நின்றுவிடக்கூடாது. அங்கு ஆரம்பிக்கும் அன்பு எங்கும் பரவவேண்டும். இறைவன் எல்லா உயிர்களிடம் இருக்கின்றார். எனவே எல்லோர்க்கும் அன்பும் அறனும் வழங்கப்படவேண் டும். அறம் பயில்வோர் இடத்திலும் நீதி வழுவா நடுவுநிலையில் நின்றோரி டத்தும் இறைவன் பிரத்தியட்சமாக காணப்படுவன். இவ்வுண்மையைத்' தமிழ் ஞான ஞான முனிவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தனது தேவாரமான தொன்றில் தெளிவாகக் கூறுகின்றார். அது பின்வருமாறு

இன்ன உரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது நீதிபலவும்
தன்ன உருவம் என மிகுந்தவன் நீதியொடு தானமர் இடம்
முன்னைவினை போய்வகையால் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்னி இருபோதும் மருவித்தொழுது சேரும் வயல்வை காவிலே

இதன் கருத்து:-

எம்பெருமான் சிவன் அவனே, அவன் இன்ன உருவம் உடைய வன் இன்ன நிறம் உடையவன் என்று நாம் அறிவதென்றால் அது அரிதா னது. ஆனால் அவன் நீதி என்று சொல்லப்படும பலவும் தனது உருவ மாகக் கொண்டு எங்கும் திகழ்ந்து நிற்கிறான். அவனும் வணங்குவார்க்கு அருள்புரியும் நீதியுடன் தான் அமர்ந்தருளும் இடமாவது; தாங்கள் முன் செய்து கொண்ட வினைகள் யாவும் நீங்கிப்போய்விட தன்னை உணர்ந்து கொண்டு அவ்வகை கல்வித்துறை பல கரைகண்டு அதன் பேறு தம்மை உடைய பெருமானைப் பேணல் எனத் தெளிந்து அதற்காக வழிபாடு முயல் கின்ற முனிவர்கள் காலை மாலை இருபோதும் கடவுளைச் சிந்தையால் அணைந்து தொழுது சேரும் வயல் சூழ்ந்த வைகாவில் என்னும் திருத்தலத்து என்ற வாறு.

எம் இறைவன் சிவன் உருவம் அறிய முடியாதாயினும் நீதி எங்கு நிகழ்கின்றதோ அதனையே அவன் உருவமாகக் காண்மின் என்கின்றார்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மெய்ஞ்ஞானிகளின் முடிபுகள்.....

மேலும் சமய உண்மைகளையும், ஒழுக்க விதிகளையும் உதாசீனம் செய்கிறார்கள். விஞ்ஞானத்தால் ஒழுக்க விதிகளை உண்டாக்க முடியாது. பொய்ச்சாட்சி சொல்பவன் பிழை செய்கிறான் என்று எந்த விஞ்ஞான விதிகளைக் கொண்டும் நிரூபிக்க முடியாது. மேலும் மனிதப்பண்புகளுக்கு நாம் அடிபணியவேண்டும்என்று எந்த விஞ்ஞானமும் கூறாது: விற்ஜென்ஸ்டைன் என்ற நிபுணர் கூறுவதாவது ''எல்லா விஞ்ஞானக் கேள்விகளுக்கும் விடைகள் கண்டு கண்டு பிடித்தாலும் நாம் ஏன் சீவிக்கிறோம் என்பது போன்றனவற்றிற்கு விடை காண இயலாது''

அநுபவம் என்பது விஞ்ஞான ரீதியாக வருவது மட்டுமன்று; மெய்யியல் அல்லது தத்துவத்தின்படி அநுபவம் என்பது ஆன்மீக ரீதியாக வருவதும் உள்ளடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானத்திலும் நிரூபிக்கமுடியாதன வற்றை நாம் நம்புகிறோம். நம்பிக்கை சிறிதளவேனும் இல்லாமல் ஒன்றையும் நிரூபிக்க முடியாது. உதாரணமாக, இந்த உலகில் ஒழுங்கு முறை யிருக்கிறது என்று நம்பினால்தான் அதை விளங்கிக் கொள்ள முடியும். காலஞ்சென்ற பேராசிரியர் ரசல் போன்றோர் உலகினையும் அதன் நடவடிக்கைகளையும் விளங்கப்படுத்த முடியாது என்று கூறிவிட்டார். அவரைப்போன்றோரை ''நம்பிக்கை அற்றவர்கள்'' என்று கருதுகிறோம்.

இக்கால இளைஞர்கள் கடவுள் இருக்கிறார் என்றால் ''காட்டுங்கள். காட்டினால் தான் நம்புவோம்'' என்கிறார்கள. இதைப்போன்ற கேள்விகளை விஞ்ஞானிகள் கற்பிக்கும் ''உண்மைகள்' பற்றிக் கேட்டால் மலைக்கிறார்கள்! உதாரணமாக, சூரியனிலிருந்து பூமிக்கு ஒளி வருவது எங்கனம்? கதிர்வீசல் முறையால் என்று உடனே பதில் வரும். கதிர் வீசல் என்பது ஈதர் என்ற ஊடகத்தில், நீரில் அலைகள் போல மிதந்து ஒளி வருகிறது என்று கூறினார்கள். ஒளி நேர்க்கோட்டிற் செல்கிறது என்பதை விளக்க இந்த விதி கையாளப் பட்டது. சுமார் ஒரு நூற்றாண்டுக்காலம் இது தான் விளக்கமாக இருந்தது. ஆனால் உண்மையில் ஈதர் என்ற ஊடகம் இருக்கிறதா? விஞ்ஞானிகளின் விதிகளின் படி ஒரு பொருள் இருந்தால் அதன் நிறம் குணம் நிறை அடர்த்தி முதலியன குறிப்பிடப்படல் வேண்டும் ஆனால், இத்தகைய பண்புகள் ஏதும் ஈதருக்கு இல்லையே! ஆகையால் இல்லாததது ஒன்றை இருப்பதாக வைத்து மக்களை விஞ்ஞானிகள் ஒரு நூற்றாண்டுக் காலமாக ஏமாற்றினார்கள் என்று வானியல்மேதையான சேர்ஜேம்ஸ் ஜீன்ஸ் கூறினார்.

மேலும் இவ்வலைக்கற்பனை ஒளியின் வேறு சில தொழிற்பாட்டை விளக்க முடியாமல் இருநதது. மாக்ஷ் பிளாங்க் என்ற நிபுணர் சூரியனிலிருந்து ஒளி, பொட்டங்களாக வருகின்றது என்றார். இவரின் கூற்றும் ஒளியின் தொழிற்பாடுகள் அனைத்தையும் விளங்கப்படுத்த முடியாமல் இருக்கிறது. எனவே இன்று வரை மேற்சொல்லிய இரு கொள்கைகளையும் ஒளிச் செலுத்துகைக்கு உபயோகிக்கிறார்கள். இதில் எது சரியானது எது பிழையானது என்பது இன்று வரை மூடுமந்திரம். ஒளி எங்கனம் செலுத்தப்படுகிறது என்ற கேள்விக்கு ஏகோபித்த விடை காணப்படாவிட்டாலும், சூரியனிலிருந்து ஒளி செலுத்தப்படவில்லை என்று யாரேனும் துணிந்து கூறுவார்களா? இல்லையே!

மறுபிறவியை இந்துக்களும் பௌத்தர்களும் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்றும் சிலர் கருதினார்க்ள். திருஞானசம்பந்தர் மூன்று வயதுல் தேவாரம் பாடியதும் இன்று நம்பத் தகுந்தனவாக இருக்கின்றன. இராமானுஜம் என்ற அதிசயக்கணித மேதையும் ஐரோப்பாவிலுள்ள யெகூடி மெனுகினும் முற்பிறவிகளிற் கற்றன வற்றின் தொடர்ச்சியாலே இவ்வாறு சிறப்புற்று விளங்கினார்கள் என்று கலாநிதி இராதாகிருஷ்ணன் தமது ஒக்ஷபோர்ட்ப் பிரசங்கங்களிற் கூறியுள்ளார்.

மேலும் இக்காலத்தில் அமெரிக்காவிலுள்ள பேராசிரியர் ஷரீவின்சன் மறுபிறவிகள் பற்றி ஆராய்ந்து நூலும் வெளியிட்டுள்ளார். இதனால் திருவள்ளுவர் வாக்குப் பொய்க்கவில்லை என்பது புலனாகிறது, ''ஒருமைக்கண் தான் கற்ற கல்விஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து'' இன்னும் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆராய்ச்சி போன்றன வற்றை விஞ்ஞானிகள் விளக்க முடியாமலிருக்கிறார்கள். தூர அறிதல் தூரப்பார்வை மனத்தினால் இயக்கம் போன்றன விஞ்ஞானிகளை பிரமிக்கச் செய்கின்றன. ஆனால் இந்நிகழ்ச்சிகள் பற்றிய படிப்புக்கள் பல்கலைக்கழகங்களால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இலண்டன் கேம்பிரிட்ஜ டியூக், ஒக்ஷபோட் போன்ற பல்கலைக்கழகங்கள் மேற்கூறிய ஆராய்ச்சிகளுக்கு கலாநிதிப் பட்டங்களும் அளித்துள்ளன. ஐம்புலனுக்கு அப்பாற்பட்ட உள்ளுணர்வு என்றொரு சக்தியுண்டு. அதன் மூலமே நுண்ணியான வற்றின் தன்மைகளை ஒருவன் அறியலாம் என்று பிரான்ஸ் நாட்டு மேதையான கெறன்றி பேக்சோன் போன்றோரும் கலாநிதி இராதாகிருஷ்ணனும் கூறியுள்ளார்கள்

துறவற வாழ்க்கையும் தெய்வீக வாழ்க்கையும் இல்லா விட்டால் சமயங்கள் மக்களைக் காக்குஞ் சக்தியை இழந்து விடுவன. எவவளவு ஒழுங்கு படுத்தப்பட்ட சமயங்களாக இருந்தாலும், அதிக அளவு அறிவு பெற்றிருந்தாலும் ஆத்மீக வறுமையைப் போக்க உதவா. எங்கள் வாழ்வின் தன்மைகள் சமயத்தின் சாட்சிகளாக விருக்கின்றன. இந்திய எண்ணத்தின் படி ஞானிகளும் துறவிகஉயர்ந்த இடத்தை வசிக்கின்றனர். அறம் பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தங்கள் பேணிக்காக்கப் படுகின்றன.

தவமும் தவமுடையார்க்காகும். அவனருளாலே அவன்றாள் வணங்கி என்பனஆன்றோர்வாக்குகள அன்றோ! எந்நாட்டவருக்கும் இறைவனே; சைவர்களாகிய நாம் தென்னாடுடைய சிவனைக் கருதிப் பணிகிறோம். கல்வியின் பயன் எல்லாம் வல்ல இறைவனை யடைதலேயாகும்.

''கற்றதனாலாய பயனென் கொல்
வாலறிவன் நற்றாள் தொழா
அரெனின்''

கட்டுரை தந்துதவிய பெருமக்கள்

அழுதால் உன்னைப் பெறலாமே, திரு. மு. வைரமுத்து மானிப்பாய்.
கடவுள் தன்மை குழப்பத்தில் வராது, திராட்சையூரன்.
மெய்ஞ்ஞானிகளின் முடிபுகள், சி. குமாரசாமி எம். ஏ. மானிப்பாய்.
திருவருளும் குருவடிவும், மு. சிவராசரத்தினம் எம். ஏ.
(அதிபர் அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.)
சௌக்கியப் பழக்கம் — 1 திரு, சின்னத்துரை ராஜபாத வீதி, நல்லூர்.
இறைவன் நீதியாகவும் உளன், திரு. சோ. அருணாசலம்
(அரசாங்க உதவி அதிபர், சங்கானை.)
சங்கல்ப்பம், சிவஸ்ரீ. க. குகதாசக்குருக்கள் ஆனைக்கோட்டை.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org